


உ
சிவமயம்

# ஆத்மஜோதி

*தாபிதம்: 1948*

ARTHMA JOTHY
Est. 1948
ISSN 1703-9185

மலர் 5: இதழ் 5
சுபானு வருடம்
ஆடி - புரட்டாதி
திருவள்ளுவர் ஆண்டு
2036

**கௌரவ ஆசிரியர்**
பேரறிஞர்
முருகவே பரமநாதன்
**பிரதம ஆசிரியர்**
திரு. வி. சுந்தவனம்

**ஆசிரியர் குழு**
திரு. செ. சோமசுந்தரம்
திரு. ச. திருநடராசா
திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**
திரு. மா. கனகசபாபதி
**அச்சுப் பதிப்பு**
விவேகா அச்சகம்

**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான நிலையம்
பதிவு இல: 1476651

**தொடர்பு முகவரி**
Siva Muthulingam
217 Morningside Ave.
Apt. 912
Toronto, ON. M1E 3E4
Tel: (416) 724-6240
www.arthmajothy.org

## உள்ளடக்கம்

1. ஆசிரியர் தலையங்கம்
2. எங்குமுள்ள பிள்ளையார்
3 ஊதியம் கருதா ஊழியன்
4. அகம் மகிழ்ந்த நட்பு
5. பிரான்சில் சேக்கிழார் விழா
6. மகான்களின் தரிசனத்தால் அனுபூதி பெற்றவர்
7. நான் கண்ட ஆத்மஜோதி
8. சிம்பொனியில் திருவாசகத்தை வடிவமைத்தது சரியா?
9. தீவினை மாளும் சிவகதி சேரும்
10. சற்குரு 'ஆத்மஜோதி' முத்தையா சுவாமிகள் காலத்தில் நான் அறிந்தவை
11. திருவாதவூரடிகள் புராணம்
12. இந்து சமயப் பேரவைச் செய்திகள்
13. மொன்றியலில் முத்தமிழாரம் 2005
14. மதுரை ஸ்ரீ திருப்புகழ் சுவாமிகள்
15. ஒல்லாந்து யாத்திரை
16. போகாத இடந்தனிலே போக வேண்டாம்
17. ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை





# வாழும் சோதி

உலகம் சுழல்கிறது. உயிர்களும் சுழல்கின்றன. உலகம் உயிர்களை வாழவைக்கச் சுழல்கின்றது. உயிர்கள் வாழத் தெரியாமல் - வாழமுடியாமற் சுழல்கின்றன.

'ததியுறும் மத்திற் சுழலுமென் ஆவி தளர்விலதோர்
கதியுறும் வண்ணம் அருளுகண்டாய்.....'

என்று அபிராமியை வேண்டுகின்றார் அபிராமிப்பட்டர்.

உயிர்கள் ஏன் துன்புறுகின்றன என்று விசாரணை நடத்தியவர்கள் சமயங்களைத் தோற்றுவித்தனர். நாடுகளின் புவியியல், மக்கள் வாழ்க்கை முறை போன்றவற்றுக்கேற்பச் சமயாசாரங்கள் வேறுபட்டனவேயன்றி அடிப்படைத் தத்துவம் எல்லாச் சமயங்களுக்கும் ஒன்றுதான்.

அது உயிர்களை ஈடேற்ற வேண்டும் என்பது. உயிர்களை ஈடேற்ற வேண்டி ஏழாலையூர் நா. முத்தையா அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளில் 'ஆத்மஜோதி' பத்திரிகையைத் தொடங்கி வெளியிட்டு வந்தமையும் ஒன்றாகும்.

ஆத்மா, ஆன்மா ஆகிய சொற்கள் உயிரையே குறிக்கின்றன. ஆத்மஜோதி என்றால் உயிரொளி என்று பொருள் - உயிருக்கு ஒளியூட்டும் சஞ்சிகை என்று பொருள்.

உயிருக்கு ஒளியூட்டும் பணியினை மேற்கொண்ட முத்தையா அவர்களும் 'ஆத்மஜோதி' முத்தையா என்றே அழைக்கப் படுகின்றார். பத்திரிகையின் பெயர் பொதுவாக அதனை நடத்தும் ஆசிரியர்களுடன் ஒட்டிக்கொள்வது வழக்கந்தான். ஆனால் முத்தையா அவர்கள் உண்மையாகவே சோதி பெற்ற ஆத்மாதான்.

அது, அவர் மறைந்தும் மறையாது ஒளிவீசிக் கொண்டிருப்பதிலிருந்து நன்கு தெரிகிறது.

பத்தாண்டுகள் பறந்துவிட்டன ஆயினும் அவரது பணிகள் மறைந்துவிடவில்லை. அவரது நினைவுகள் இறந்து விடவில்லை.

அவர் வாழும் சோதியாக, அவரது அடியார்களைச் சூழ்ந்து கொண்டிருக்கிறார்.

இந்த இதழ் அவரது பத்தாண்டு நினைவிதழாக அதிக பக்கங்களுடன் வெளிவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# எங்குமுள்ள பிள்ளையார்

இணுவில்
பரராசசேகரப் பிள்ளையார்

எரிகாற்று நிலநீரும் வானு மானார்
எங்குஞ்செங் கோலோச்சும் கோனு மானார்
பரிசாகப் போட்டியிலே பழத்தை வென்றார்
படுபாவக் கயமுகனின் பரிசு கொன்றார்
திருவாய திருயாவும் இணுவை யூரிற்
சேரவருள் பாலித்துத் திகழு கின்றார்
பரராச சேகரனார் பரவி முன்னாள்
பணிந்தபெரு வரலாற்றுப் பிள்ளை யாரே. (15)

ஏழாலை
அத்தியடி விநாயகர்

ஊழாதி வினைதீர்க்கும் ஓம்மு கத்தார்
உள்ளியுணர்ந் தோம்புவார் தம்ம கத்தார்
வாழாரை வாழ்விக்கும் வார்க ரத்தார்
வானோரின் துயர்போக்கி வாழ்வ ளித்தார்
ஆழாழக் கிணறதுபோல் அறிவில் ஊறும்
ஆன்றோரின் நீதியால் அமைதி காணும்
ஏழாலை அத்தியடி இலங்கு கின்றார்
ஏத்தியிவர் இணையடிகள் இறைஞ்சு வாமே. (16)

சுன்னாகம்
சந்திரசேகரப் பிள்ளையார்

சந்திரனைத் தாதைதலை அணிய வைத்தார்
தந்திரத்தில் மிகவல்லார் மந்தி ரத்தார்
விந்தைமிகு கயமுகனின் வீரம் வென்றார்
வேகமுடன் வந்தபெரு நெருப்பை யுண்டார்
அந்தமிலாத் தமிழ்க்கல்வி வளர்த்த ஆசான்
அறிஞர்புகழ் குமாரசாமிப் புலவர் ஆக்கச்
சந்தைவளச் சுன்னாகஞ் சார்ந்து காக்குஞ்
சந்திரசே கரப்பிள்ளை தாள்வீழ் வாமே. (17)





# ஊதியம் கருதா ஊழியன் நாவன்னா முத்தையா

பேரறிஞர் முருகவே பரமநாதன்

"தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்கிறார் தமிழ்தோட்டி. 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்று பேசிப்பேசித் திருப்பணியாற்றியவர் நாவேந்தர். நம்மாழ்வார் தன்னைத் "தொண்டர், தொண்டர் தொண்டர் தொண்டன்' என அறிமுகம் செய்தார். "அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கிவிட்டு விட்டால் இன்பநிலைதானே வந்தெய்தும் பராபரமே" என்பது தாயுமானவர் திருவாக்கு. "அப்பாலும் அடிசார்ந்த அடியார்" பெருமை சுந்தரர் தமிழிற்காணலாம். "வாழையடி வாழையென வந்ததிருக்கூட்ட மரபில் நம்மத்தியில் வாழ்ந்து காட்டிய ஆத்மீக வள்ளல், ஞானசுரபி அவர்களின் தன்னிழப்போடு கூடிய மக்கள் சேவை அளப்பரிது, ஆரும் செயற்கரிது. மனித்தப் பிறவியின் இலக்கையடைந்த கருவிலே திருவுடைய மாவீரர் அவர். கர்ப்பதாசருமாம்.

ஊழியன், தொண்டன், பணிவிடையாளன், சேவகன், பணியாளன் என்பன ஒருபொருள் அமைதியுடையன. எல்லாருமே பிரதியுபகாரம், குறியெதிர்ப்பை முன்வைத்தே கருமமாற்றுவர். நாமறிந்த காந்தியடிகள், பூமிதான யக்ஞத் தந்தை விநோபாஜி, பெருந்தலைவர் காமராஜர், தமிழ்த் தென்றல் திரு வி.க. போன்ற இன்னும் பலர் இவ்வரிசையிற் சேராதவர்கள். ஆசிரியராகத்தன் பணியை ஏற்ற ஆத்மஜோதி முத்தையா சம்பளத்துக்கு வேலை செய்யவில்லை. தன் ஊதியத்தையே பொதுப்பணிக்கு அர்ப்பணஞ் செய்தவர். நாவேந்தர் வாக்குக்கு இலக்கிதமானர். இளம்பராயத்திலே மலையகத்துத் தலைநகரான நாவல் நகர் அவரை வரவேற்றது. படிப்பிக்கும் பாரிய கல்விப்பணியைத் தெய்வப் பணியாக்கிக் கடமையைச் செய் பயனை எதிர்பாராதே யென்று செயல்வீரன் ஆனார். ஆசானாக, பத்திரிகை ஆசிரியராக, (ஆத்மஜோதி மாதாந்த சமய சஞ்சிகை), நூலாசிரியராக, பதிப்பாசிரியராக, வெளியீட்டாசிரியராக, முழுநேர எழுத்தச்சனாக, ஆன்மீக குருவாகத் தன்னை முற்றுமுழுக்க மாற்றியமைத்துக் கொண்டார். ஏழாலை, நாவலப்பிட்டியாயிற்று. இராமன் இருக்குமிடம் அயோத்திதானே. மலையகத்தையும் தாண்டி ஏனைய மாநிலங்களிலும் அவர் அறிமுகமானார். தமிழ்நாடு, பாரதம் சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, (தென்கிழக்காசியா) நாடுகள் இவற்றையும் கடந்து பிற்கால கட்டத்திற், சுவிஸ், கனடாவுக்கும் விஜயம் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தோற்றம் காட்சிக்கு இனியது, எளிமையானது. வாக்கில் உறுதி, செயலிலே திடம், பேச்சில் ஈரம், காதித்துணி (கதர் ஆடை) யில் அமைந்த வெண்ணிற நான்கு முழ வேட்டி இடுப்பில், கதர் ஆபாரம் (மேலங்கி) தோளிலே துண்டு. எல்லாமே கதர் மயம். முச்சந்தியிலே சிறிய குங்குமப் பொட்டு. கையிலே சோளி (Handbag), காலிலே பாதணிகள் - ஆளுமைமிக்க தோற்றம். ஆறடிக்குப் பதியாத உயரம். கண்ணிலே ஒளி - முகத்திலே தேசசுடன் கூடிய சாந்தம். பொறுப்புணர்வு, நாணயம், நாநயம், நம்பிக்கை, நீதி போன்ற உதாரண குணங்கள். எல்லாரும் முத்தையா மாஸ்ரர் என அள்ளூற அழைக்கும் பேர்வழிதான் ஆத்மஜோதியவர்கள். இல்லற ஞானி இராமச்சந்திராவோடு இணைந்து துவங்கிய ஆத்மஜோதி மலர் சைவத்தமிழ் வதியும் நாடுகளிலெல்லாம் செல்வாக்குப் பெற்றது. முத்தையா இப்போ ஆத்மஜோதியானார். 1948இல் துவங்கிய இவ்விதழ் 1983வரை வெளியானது. அவ்வாண்டு இனவன்முறை நாவலப்பிட்டியையும் விடவில்லை. அழிப்பால் ஆத்மஜோதி நின்றுபோனது. ஆத்மஜோதி நிலையம் சொய்சாக்கலை வீதியில் அமைந்திருந்தது. நடமாடும் நூல்நிலையம் எனப் போற்றப்பட்ட முத்தையரின் சேவை மலையகத்திற் புகாத இடமே இல்லை. டாக்டர் நந்தியும் தோழமையுடன் தொண்டாற்றினார். மறக்க முடியாத பதிவுகள் இவை.

ஏழாலையங்கள் நிறைந்த ஏழாலையில் வாழ்ந்த பொன்னுப்பிள்ளை இவர் தாயார். நாகமணி இவர் தந்தையார். நா - என்பது நாவலப்பிட்டியோடும், நாவலர் அடிச்சுவட்டோடும், நால்வர் காட்டிய வழியோடும் தொடர்பானது. சி. வை. தாமோதரனார், ஞானப்பிரகாசம். பொன்னையா, பேரம்பலம் பரியாரியார் இலக்கிய கலாநிதி, மு. கந்தையா சிவசண்முகவடிவேலு, இ. கந்தசாமி போன்ற ஞானச்செல்வர்களை ஈன்ற பூமியும் அதுவே. 1918 வைகாசி விசாகம் ஆசிரியப் பெருந்தகை மண்ணிற் தவழ்ந்த தினம். திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலை இவர் பயிற்சி பெற்ற இடம். சிந்தனையாளர் கைலாசபதியும், பண்டிதமணியும் இவராசான்கள். பண்டிதமணியே தன் மாணாக்கரை ஆத்மீக வள்ளல் என வாழ்த்தினார்.

உள்ளத்துறவு நிறைந்த ஆத்மஜோதியர் ரமணர். அரவிந்தர், அன்னை மீரா (அரவிந்தாச்சிரமம்) சுத்தானந்தர், யோகர்சுவாமிகள், திருக்கேதீசுவரம் திருவாசகசுவாமிகள் (ஸ்ரீமத்சபாரத்தினம் சுவாமிகள்) இராமதாசர், கிருஷ்ணாபாய், இராமானந்தர், சித்தானைக்குட்டி,





(மட்டுநகர்) பித்துக்குளி முருகதாஸ், சச்சிதானந்தர், சத்தியசாயிபாபா, குன்றக்குடி அடிகளார், ஸ்ரீலஸ்ரீ சாயிமாதா சிவபிருந்தாதேவி, சிவபால யோகி, சுவாமி ஹரிதாஸ், ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் போன்ற மகான்களைத் தரிசித்த பாக்கியம் நிறைந்த புண்ணியவான். கன்னியா குமரியில் இருந்து கைலைவரை யாத்திரை செய்த ஞானபூபதி. தாயைக் கடல் விளக்கஞ் செய்த தாமோதரன். இவர் கைப்பட எழுதிய நூல்கள் இருபத்தைந்துக்கு அதிகம். வெளியானவை 22. வெளிவராதவை 3 கையெழுத்துப் பிரதியாய் உள்ளன.
1. துர்க்கையம்மன் 2. சுவாமி சிவானந்தர் 3. சத்திய சாயிபாபா
முதல் எழுதி வெளியிட்ட நூல் 'திருமுறைக்காட்சி'. இரண்டாவது நூல் 'கேதார யாத்திரை'.

ஏழாலை, முப்பெருஞ்சித்தர், ஈழத்துச் சித்தர்கள் ஆகியன சாகித்திய அக்கடமிப் பரிசு பெற்றவை.

இந்தோனேசியா மக்களை கருவாக வைத்து எழுதி வெளியிட்டவை 2.

1. இளஞ்சிறார்கட்கேற்ற இந்தோனேசியத் தத்துவக்கதைகள்
2. இந்தோனேசியாவில் இரண்டு வருடம்

கனடாவில் வெளியானவை 5.

1. தரிசனம்
2. என்னையெனக்கறிவித்த எங்கள் குருநாதன்
3. யோகிராம் சுரத்குமார்
4. திருமுறைக்கதைகள்
5. தெய்வீக வாழ்க்கை

கனடாவுக்கு வருகைதந்தது 1994, 1995. இவர் மறைவு கனடாவில் 1995. பிறப்பு 1918.

கனடாவில் இந்து சமயப் பேரவை துவக்கம் 03-07-1994 - அவரே தாபகர். ஞானகாந்தன் என்பவர் 1991 - 1995 வரை ஆத்மஜோதியைத் தொகுப்பாக்கி இடையிடையே வெளியிட்டார். பின்னர் 2000 வருடம் துவக்கம் இன்றுவரை வருடம் 4 முறை இலவசமாக வழங்கப்படுகிறது. அடிக்கும் பிரதிகள் 2000. இவை பல நாடுகட்கு அனுப்பப்படும். இதன் ஆசிரியர் கவிஞர் கந்தவனம் அவர்கள் உதவியாசிரியர் திருமுறைச் செல்வர் சிவமுத்துலிங்கம் அவர்கள். இராசதுரையவர்கள் கௌரவமந்திரியாய் இருந்தபோது நடந்த சைவசமய மகாநாட்டுக்கான சிறப்பு மலர் ஒன்றை ஆத்மஜோதி முத்தையா அவர்கள் தரமானதாக வெளியிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மறைந்து பத்தாண்டுகளாயின. அந்நினைவாக இவ்விசேடமலர் வெளியிடப்படுகிறது. மாணவர்கட்குப் பரீட்சை நடத்திப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இவர் இந்து மதவாதியாய் வாழ்ந்தார்.

புரந்தார் கண்ணீர் மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து. - குறள் 780

ஒப்புரவி னால்வரும் கேடெனின் அ∴தொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து. - குறள் 220

ஓம் சாந்தி. சாந்தி சாந்தி.



மொன்றியல் ஆத்மஜோதி தமிழர் இணையம் வழங்கிய 'முத்தமிழாரம் 2005' கலை விழாவில் இணையத்தின் தலைவர் குத்துவிளக்கு ஏற்றுகிறார்.





# அகம் மகிழ்ந்த நட்பு

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் இறைவனடி எய்திப் பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன. 'நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தனரே' என்றார் திருமூலநாயனார். அது சாதாரண மக்களைப் பற்றி அவர் சொன்னது. பெரியவர்களின் நினைவு ஒழியாது - அழியாது.

பாடசாலை ஆசிரியராக, பத்திரிகை ஆசிரியராக, பேச்சாளராக, எழுத்தாளராக, சமய, சமூகத் தொண்டராகப் பல பாத்திரங்கள் தாங்கித் தன் பணிகளைச் செய்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மக்களுக்குக் கலங்கரை விளக்கமாக - ஆத்மஜோதியாகத் திகழ்ந்த ஞானசுரபி முத்தையா அவர்கள் பலருக்குக் குரு; எனக்கு நண்பர்.

நான் வாழ்ந்த குரும்பசிட்டிக்கும் அவர் பிறந்த ஏழாலைக்கும் அதிக தூரம் இல்லை. எனினும் எம்மை நண்பர்களாக்கிய பெருமை நாம் தொழில் பார்த்த மலைநாட்டுக்கேயுரியது. அவர் நாவலப்பிட்டியிலும் நான் மாத்தளையிலும் ஆசிரியர்களாகப் பணியாற்றிய காலத்தில் அங்கு நடைபெற்ற சமய இலக்கியக் கூட்டங்கள் எம்மை அடிக்கடி சந்திக்க வைத்தன.

எனினும் 1961ல் சரஸ்வதி பூசைத்தினத்தில் அவர் தமது பாடசாலையாகிய கதிரேசன் கல்லூரிக்கு என்னை அழைத்துப் பேச வைத்தார். இந்த நிகழ்வின் பின்னரே எமக்கிடையில் நட்பு அகம் நக மலரலாயிற்று எனலாம்.

நான் எத்தனையோ பாடசாலைகளுக்குச் சென்றிருக்கிறேன்; சொற்பொழிவாற்றியிருக்கிறேன். ஆனால் நாவலப்பிட்டியில் ஆத்மஜோதி அவர்கள் எனக்களித்த வரவேற்புபசாரத்தை மறக்க முடியாது.

கூட்டம் முடியத் தனது 'ஆத்மஜோதி' அச்சுக்கூடத்துக்கு அழைத்துச் சென்றார். ஆத்மஜோதி ஆரம்பிக்கப்பட்ட வரலாற்றையும் அதன் வளர்ச்சியையும் கூறினார். பத்திரிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1948ல் தொடங்கப்பட்டாலும் அச்சுக்கூடம் தொடங்கி ஒரு வருடந்தான் ஆகியிருக்கிறது. அதனை அவர்தம்பியார் அருமைநாயகம் அப்பொழுது மேற்பார்வை செய்து வந்தார்.

அதனைத் தொடர்ந்து விருந்தோம்பல் நடந்தது. விருந்தோம்பலுக்கு வேறு சில ஆசிரியர்களையும் அழைத்திருந்தார்.

விருந்தோம்பலின் பின் ஒரு தோட்டத்துக்கு அழைத்துச் சென்றார். மலைநாட்டுத் தோட்டப் பகுதிகளில் இருக்கக்கூடிய மாணவர் பிரச்சினை குடும்பப் பிரச்சினைகளைச் சொல்லிக் கொண்டே போனார். குடும்பப் பிரச்சினைகள் சிலவற்றைத் தான் தீர்த்து வைக்கும் விதங்களையும் விளக்கினார்.

ஒரு கட்டத்தில் திரும்பிப் பார்த்தேன். பின்னால் ஒரு கூட்டமே வந்து கொண்டிருந்தது. ஆசிரியர் தங்கள் கிராமத்துக்கு வந்த மகிழ்ச்சியில் அவருக்கு மரியாதை செலுத்த மக்கள் கூடிவிட்டனர். பாடசாலைக்கு அப்பால் எத்தகைய மதிப்புடன் முத்தையா இருந்தார் என்பதை இச்சிறு சம்பவம் எடுத்துக் காட்டியது.

ஒருமுறை -1966 என்று நினைக்கிறேன் - எனது குரும்பசிட்டி வீட்டுக்கு முத்தையா அவர்கள் வந்திருந்தார்கள். ‘ஏழாலை இலந்தைகட்டி ஞானவைரவர் கோயிலில் சமய விழா ஒன்று நடத்துகிறேன். நீர் வந்து பேசவேணும்’ என்றார்.

குறித்த நாளில் விழாவுக்குச் சென்றேன். விழாவில் சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் கந்தையா, பண்டிதர் சங்கரப்பிள்ளை, சைவப்புலவர் செல்லத்துரை என்றுபெரும் அறிஞர்கள் கூடியிருந்தார்கள். அவர்களோடு சிறியேனையும் சரியாசனம் வைத்ததிலிருந்து ஆத்மஜோதி அவர்கள் என்மீது வைத்திருந்த நம்பிக்கையையும் மதிப்பையும் உணர முடிந்தது.

தன்னுடன் படித்தவர்கள், படிப்பிப்பவர்கள், ஒத்த வயதினர் என்றில்லாது என்போன்ற இளைஞர்களுடனும் நண்பனைப் போலப் பழகும் ஓர் அதிசய இயல்பு ஆத்மஜோதி அவர்களிடமிருந்தது. மாணவர்கள்கூட அவருக்கு நண்பர்கள்தாம். வெறுப்புணர்ச்சி அல்லது பகைமையுணர்ச்சி என்பதை நான் அவரிடத்திற் கண்டதில்லை.





எல்லோரைப் பற்றியும் நன்றாகவே பேசுவார். நல்லவர்கள் நல்லதையே காண்பார்கள். ஆத்மஜோதியின் நல்ல மனம் மற்றவர்களின் நல்ல குணங்களையே கண்டது. நற்பண்புகளையே போற்றியது.

அவரது மனப்பான்மை பரந்து விரிந்தது. அதில் அறவே கிடையாததொன்று ஏற்றத்தாழ்வு. அவர் வாழ்ந்த சமூகத்திற் பலவிதமான ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. பிறப்பால், சமயத்தால், படிப்பால், பதவியால், பொருளாதாரத்தால் வேற்றுமைகள் மிகுந்த சமூகம் தமிழ்ச் சமூகம். வேற்றுமைகளைப் பாராது எல்லோருடனும் அன்பாகப் பழகும் இவரது பண்பும் இவரது நண்பர்கள் தொகையை அதிகரித்தன.

வேற்றுமைகளைக் கண்டு இவர் பொங்கி எழவில்லை. புரட்சிக்கொடி உயர்த்தவில்லை. அவை ஆன்மீகவாதிகளின் வழியல்ல என்று கருதினார். மக்களின் உள்ளங்களைப் பக்குவப்படுத்தினால் வேற்றுமைகள் தாமாக விலகும் என்று நினைத்துச் சமயப்பணிகளிலே தீவிரமாக ஈடுபட்டார். அவரது சமயப்பணி சமூகத்தைச் சீர்திருத்தும் பணியாகவே அமைந்தது. பேச்சால், எழுத்தால், பழகும் முறைகளால் ஏற்றத்தாழ்வில்லாத ஒரு சமூகத்தை உருவாக்க முயன்றார். அவரது எழுத்துக்கள் இந்த உயர்ந்த இலட்சியத்தை இன்றும் எடுத்துக்காட்டியவண்ணம் இருக்கின்றன.

நட்புறவை மிக எளிதாக வளர்க்க இவருக்கு உதவியாக இருந்த மற்றுமொரு தகைமை இவரது இனிமையான உரையாடல் எனக்குத் தெரிந்த வரையில் அவர் இன்னாத சொற்களை - கடும் மொழிகளை என்றுமே பேசியதில்லை; பேசியதாக நான் கேள்விப்படவுமில்லை. கனிவான மொழிகளையே எப்பொழுதும் பேசி யாவரையும் கவர்ந்த ஒரு பெருமகன் ஆத்மஜோதி அவர்கள்.

இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று - குறள் 100

என்றார் வள்ளுவர் பெருமான். இந்தக் குறளுக்கேற்ப வாழ்ந்து பயன் கண்டவர் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வியல்புகளால், அதாவது

1. நல்லனவற்றையே பிறரிடம் காணல்
2. வேற்றுமைகள் காட்டாமை
3. இனிமையான பேச்சு

ஆகியவற்றால் அவர் எல்லோரது மதிப்புக்கும் உரியவராகத் திகழ்ந்தார். பலர் அவரது நண்பர்களானமைக்கும் இவ்வியல்புகளே காரணம்.

நண்பர்களுள்ளும் 'உவப்பத் தலைக்கூடி உள்ளம் பிரியும்' பெற்றிவாய்ந்தவர்கள், உதவும் கரங்களை நீட்டி அவரது பணிகளுக்கு உதவியவர்கள், ஆத்மஜோதிக்கு ஒழுங்காக எழுதியவர்கள் என்று பலவகைப்பட்டவர்கள் இருந்தனர்.

நான் அவரது நாகரிகமான குணங்களுக்காக, தன்னலமற்ற பணிகளுக்காக அவரை மதித்து அவருடன் அகம் நகும் நட்பும் பூண்டு பழகி வந்தேன். அவரை நண்பராகப் பெறக் கிடைத்தது நான் செய்த தவம். அவரைப் போன்ற நல்லவர்களிலேதான் உலகம் இயங்கிக்கொண்டிருக்கிறது.

அவர் நினைவு எல்லோரும் அவரைப் போல் நல்லவர்களாக வாழவேண்டும் என்ற விருப்பத்தையே வளர்க்கின்றது.

அவர் மனிதம் வாழ்க!
அவர் புனிதம் வெல்க!

- வி. கந்தவனம்

## இந்து சமயப் பேரவைச் செய்திகள்

10-08-2005 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் பிரித்தானியா சைவமுன்னேற்றச் செயலாளர் வ.இ. இராமநாதனின் சிறப்புரை இடம்பெற்றது. சைவதுரந்தரர் வி. கந்தவனம் தலைமை தாங்கினார். சிவ முத்துலிங்கம் அவர்கள் நன்றியுரை கூறினார்.





## பிரான்சில் சேக்கிழார் விழா

பிரான்சில் 02-07-2005 சனிக்கிழமை லாக்கூர்நேவ் என்னும் பதியில் எழுந்தருளும் அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் பெரியபுராணத்தைப் பாடியருளிய சேக்கிழார் பெருமானுக்குப் பெருவிழா ஒன்றினை உலக சைவப்பேரவை - பிரான்சுக் கிளையும் லாக்கூர்நேவ் சித்திவிநாயகர் ஆலயமும் இணைந்து நடத்தின.

விழாவுக்குச் சித்திவிநாயகர் ஆலய நிர்வாகத்தலைவர் சிவத்திரு ஜெயராசசிங்கம் தலைமை தாங்கினார்.

காலை சேக்கிழார் அரங்கில் சிவஸ்ரீ ச. பாலகிருஷ்ணக் குருக்கள், சிவஸ்ரீ அகோரமூர்த்திக் குருக்கள், சிவஸ்ரீ கணேச சிவசுதன் குருக்கள், சிவஸ்ரீ வெங்கடேச சுப்பிரமணியக் குருக்கள் ஆகியோரின் ஆசியுரைகளைத் தொடர்ந்து சிவஸ்ரீ ப. சிவஞான சுப்பிரமணியஐயா தொடக்கவுரை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து திருவருட்பா திலகம் இரத்தின சிவ சண்முகம், கவிமணி விஜயரட்ணம், திருப்பணிச் செம்மல் சுந்தர இரத்தினசபாபதி, சிவத்திரு முத்துக்குமரன், கவிஞர் கி. பாரதிதாசன்,



விழாவில் உலக சைவப் பேரவைத் தலைவர் வண. யோகானந்த அடிகளார் உரை நிகழ்த்துகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார்க்கன்பன் கோவிந்தசாமி ஜெயராமன், சிவசித்தகுமரன், திருமதி ராஜி சிமோன், திருமதி ஆதிலட்சுமி வேணுகோபால் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கினர்.

ஆத்மஜோதி ஆசிரியர் கவிஞர் வி. கந்தவனம் சிவநந்தி அடிகளார் நினைவாகத் திருத்தொண்டர் பெருமை பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

சங்கீதபூஷணம் எம். குலசீலநாதன் அவர்களின் உரையும் இடம்பெற்றது. உலகச் சைவப் பேரவையினதும் இலண்டன் மெய்கண்டார் ஆதீனத்தினதும் தலைவர் யோகானந்த அடிகள் சிவநந்தி அடிகள் ஓராண்டு நினைவுரை நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து செவனி சிவனடியார் வில்லிசைக் குழுவின் 'தெய்வச் சேக்கிழார்' என்ற வில்லுப்பாட்டு இடம்பெற்றது.

பிற்பகல் நால்வர் அரங்கில் பலவிதமான மாணவர் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அவற்றைப் பழக்கி வழங்கிய ஆசிரியர்களின் பங்களிப்புகள் சேக்கிழார் பெருமானதும் திருத்தொண்டர்களினதும் பெருமைகளை மாணவர் உள்ளத்திலே ஊன்றச்செய்வதாக இருந்தன.

## ஒல்லாந்து ஸ்ரீ வரதராஜ செல்வவிநாயகர் ஆலயத் திருவிழா

ஒல்லாந்தில் தென்கெல்டர் நகரத்தில் எழுந்தருளியிருக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ வரதராஜ செல்வவிநாயகர் ஆலய வருடாந்தத் திருவிழா 18-06-2005 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 29-06-2005 அன்று வைரவர் மடையுடன் நிறைவு பெற்றது. 26-06-2005 ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் 27-06-2005 தீர்த்தத் திருவிழாவும் மறுதினம் பூங்காவனமும் நடைபெற்றன. தேர்த் திருவிழாவுக்கு ஒல்லாந்து எங்கணும் வாழும் சைவ அடியார்கள் 5000க்கும் மேல் வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது.

திருவிழா நாட்கள் முழுவதும் கனடாவிலிருந்து அழைக்கப்பெற்ற 'ஆத்மஜோதி' ஆசிரியர் கவிஞர் வி. கந்தவனத்தின் சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.





ஓம் நமசிவாய

## மகான்களின் தரிசனத்தால் அனுபூதி பெற்றவர்

**திருமுறைச் செல்வர் சிவ. முத்துலிங்கம்**

சேக்கிழார் பெருமான் இயற்றிய திருத்தொண்டர் புராணம் ஊடாக நாம் 63 நாயன்மார்களின் வரலாற்றையும், 9 தொகை அடியார்களின் சிறப்புக்களையும் அறிகின்றோம். அவர்கள் பக்தி வைராக்கியத்துடனும், உயர்ந்த குறிக்கோளுடனும், வாழ்ந்ததோடு சிவதொண்டர்களாகவும் வாழ்ந்து அளப்பரிய பணிகளைச் செய்தனர். வாழையடி வாழையாகப் பெரியபுராணத்தில் கூறப்படும் திருத்தொணடர்கள் போன்ற உயர்வாழ்வு வாழ்ந்ததோடு தன் அடியார்களை அதாவது தன்னைப் பின்பற்றுபவர்களையும் வாழவைத்தவர் ஆத்மஜோதி முத்தையா அவர்கள்.

சமரச சன்மார்க்க ஞானியான பெரியார் தன் செயல்பாடுகள் குறிக்கோள்களில் இருந்து வழுவியதில்லை. தொண்டிலும் அவர் சிவதொண்டராக, சமூகத் தொண்டராக ஆன்மீக கலாச்சாரத்தைப் பரப்பும் திருத்தொண்டராக மிளிர்ந்தவர். இவரின் அளப்பரிய சேவையினால் சிறுவர்கள் இருந்து பெரியவர்கள் வரை அனைவரது மதிப்பையும் பெற்றவர்.

கருவிலே திருவுடைய பெரியாருக்கு சிறுவயதிலே ஆன்மீக தாகம் ஏற்பட்டது வியப்பல்ல. தன்னுடைய 26வது வயதில் 1944ம் ஆண்டு சுவாமி சுத்தானந்தர் எழுதிய இரமண இரகசியம் என்ற நூலை வாசித்தார். அவர் வாசிக்கவில்லை திரும்பத் திரும்பப் படித்தார். இரமணரை தரிசிக்க வேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் உதித்தது தன் பாடசாலை விடுமுறையைப் பயன்படுத்தி இந்தியாவிற்கு பயணமானார். உடனடியாகத் திருவண்ணாமலைக்கு சென்று ரமணதரிசனம் பெற்றார்.

பல பிறப்புக்களில் செய்த பூர்வீக புண்ணியத்தினால் தன் வசமிளந்து ஆத்மீக சக்தியினால் ஈர்க்கப்பட்டு தன்னிடம் வருகின்றார் என்பதை தன் ஞானதிருஷ்டியினால் அறிந்த ரமணர் அவர்கள் திரு. முத்தையா அவர்களை நோக்கித் தன் பார்வையைச் செலுத்தினார். அந்தப் பார்வையிலிருந்து வந்த ஒளி தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடுருவிப் பாய்ந்ததைத் தான் உணர்ந்ததாக எங்களிடம் கூறியிருக்கின்றார். இரமண பகவானிடம் நயனதீட்சையைப் பெற்ற முத்தையா அவர்களின் உள்ளத்தில் பக்திவைராக்கியம் மேலோங்கியது. மகான்களின் தரிசனத்தால் கிடைக்கும் பேறுகளையும் உணர்ந்து கொண்டார். ரமணரின் தரிசனத்தால் ஆத்மஅனுபூதி பெற்ற ஈழத்தவர்கள் பலர். அவர்களில் சிலரின் பெயர்கள் பின்வருமாறு:
மயில்வாகனம் சுவாமிகள், மகாதேவ சுவாமிகள், இல்லறஞானி இராமச்சந்திரா, ஆத்மஜோதி முத்தையா, செல்லத்துரை சுவாமிகள்.

திருவண்ணாமலையில் ரமண பகவானின் ஆச்சிரமத்தில் சிலநாட்கள் தங்கியிருந்து அவரின் அருளாசிகளைப் பெற்ற பின்பு சுவாமி சுத்தானந்தரையும், சுவாமி அரவிந்தரையும் தரிசிப்பதற்காக பாண்டிச்சேரிக்குப் பயணமானார். பல சிரமங்களுக்கு மத்தியில் இருவரின் தரிசனங்களையும் பெற்றார். தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் வாய்ப்பு கிடைக்கும் பொழுதெல்லாம் மகான்களின் தரிசனங்களைப் பெறத் தவறியதில்லை.

தரிசனம் பெற்றோரில் சுவாமி சிவானந்தர், இராமணாந்தர், ராமதாசர், மீராபாய், கிருஷ்ணபாய், சிவயோகசுவாமிகள், சித்தானைக்குட்டி சுவாமிகள், பகவான் சத்தியசாயிபாபா, இன்னும் பலர். சுருக்கமாகக் கூறினால் திரு முத்தையா அவர்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் தன் காலத்தில் வாழ்ந்த ஆத்ம அனுபூதி பெற்ற மகான்கள் எவரையும் தரிசிக்கத் தவறியதில்லை. சுவாமி சுத்தானந்தரை தன்னை நெறிப்படுத்திய ஆன்மீக குருவாக என்குருதேவர் முத்தையா அவர்கள் கொண்டுள்ளார். சுவாமி சுத்தானந்தர் நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்தில் பல மாதங்கள் வாழ்ந்து திரு. முத்தையா அவர்களின் ஆத்மீக வாழ்வை நெறிப்படுத்தியுள்ளார்.

ஒருமுறை என்குருதேவர் சுவாமி சுத்தானந்தரின் காலில் விழுந்து அழுது தன் வாழ் நாள் முழுவதும் நிலையான ஆத்மீகப் பணிகளை செய்வதற்கு ஆசிகள் வழங்குமாறு வேண்டியிருக்கின்றார். ஆசிகள் தந்தேன் எனச் சுவாமிகள் பதிலிறுக்கும் வரை திரு. முத்தையா அவர்கள் தலைநிமிரவில்லை. அவ்வளவிற்கு சிக்கெனப் பிடிக்கும் வைராக்கிய பக்தி இளம் வயதிலே ஆத்மஜோதி





ஐயா அவர்களுக்கு முளைவிட்டிருந்தது.

சுவாமி சுத்தானந்தரிடம் இருந்து அன்புமணி என்ற பட்டத்தையும் ஐயா அவர்கள் பெற்றுக்கொண்டார். அன்பே சிவம் என்பது திருமூலர் வாக்கு. தெள்ளத் தெளிந்த அடியார்களின் உள்ளத்திலே இறைவன் அன்பே சிவமாக வீற்றிருக்கின்றார். தமிழ் மக்கள் மீது கொண்ட அன்பு மேலீட்டினால் ஆத்மஜோதி ஐயா அவர்கள் தன் சிறுவயது தொடக்கம் ஆத்மீக வாழ்வு வாழ்ந்து பல ஆயிரம் பக்தர்களையும் ஆத்மீக வாழ்வு வாழ வைத்தார். அவர் செய்கின்ற செயலைத் தன் ஞானக்கண்ணால் தெரிந்த சுவாமி சுத்தானந்தர் அவர்கள் அன்புமணி என்ற பட்டத்தை அவருக்கு வழங்கினார்.

1994ஆம் ஆண்டு கனடாவில் நடைபெற்ற சைவசித்தாந்த மகாநாட்டுக்கு வருகை தந்திருந்த ஆத்மீக வள்ளல் அவர்களின் வருகைக்குப் பின்பு கனடா வாழ் தமிழ் மக்களுக்கு இடையே ஒரு சமய இனமொழி, கலாச்சார விழிப்புணர்வு ஏற்பட்டது. காவாய் சைவசித்தாந்த ஆச்சிரம பீடாதிபதியும், சன்மார்க்க இறைவன் கோயில் தாபகருமாகிய சுப்பிரமுனிய சுவாமிகள் அவர்களும் மேற்படி மகாநாட்டுக்கு வருகை தந்திருந்தார். அடியேனும், அடியேனின் சில நண்பர்களும் ஆத்மஜோதி ஐயா அவர்களுடன் சுப்பிரமுனிய சுவாமிகளைத் தரிசிப்பதற்காக அவர் தங்கியிருந்த கோட்டலுக்கு சென்றிருந்தோம்.

ஒரு மகானைத் தரிசிப்பதற்கு நாம் எப்படிப் போகவேண்டும் என்னென்ன செய்ய வேண்டுமென்பதை அன்று என் குருதேவரிடம் இருந்தே நான் கற்றேன். தன் 26 வயதில் மகான்களின் தரிசனத்தைப் பெறத் தொடங்கிய ஐயா அவர்கள் 50 வருடத்திற்குப் பின்பும் தன் வயது முதிர்ந்த நிலையிலும் சுப்பிரமுனிய சுவாமிகளின் தரிசனத்தைப் பெற்ற பக்குவத்தை, அதன் மகிமையை விபரிக்க வார்த்தைகள் இல்லை. கூடிச்சென்ற நாமும் பேறு பெற்றவர்கள் ஆனோம். பூவோடு சேர்ந்த நாரும் பரகதியடைந்தது என்ற கூற்றுப் போல கூடிச்சென்ற நாமும் ஆத்மீக ஆர்வலர்களாகவும் ஆத்மீகப் பணியை முன்னெடுத்துச் செல்லும் தொண்டர்களாகவும் மாறினோம்.

இறைவழிபாடுகளுடன் ஆத்ம அனுபூதி பெற்ற அருட்செல் வர்களின் ஆசிகளையும் தரிசனங்களையும் பெறுவது ஆன்மீக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில் உயர்நிலையை அடைய வைக்கும். வாழையடி வாழையாக குருசிஷ்ய பரம்பரையைத் தோற்றுவிக்கும் என்பதை குருதேவர் நா. முத்தையா அவர்ளின் சகவாசத்தினால் நாம் அறிந்து கொண்டோம்.

சித்தர்கள், மகான்கள், ஞானிகள், மின்காந்தம் போன்றவர்கள். தாங்கள் இறைசக்தியால் பெற்ற அருள்சக்தியை தங்கள் அடியவர்களுக்கு வழங்குபவர்கள்; இம்மையிலும் மறுமையிலும் கைதூக்கி விடுபவர்கள்; உடலை நீத்த பின் சூக்குமநிலையிலும் நின்று அருள்கொடுப்பவர்கள்.

மக்களை நல்வழிப்படுத்துவதற்காக இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட அருளாளர்களின் வழியைப் பின்பற்றி நாம் உய்வு பெறுவோமாக!

வாழ்க ஆத்மஜோதி நாமம்! ஓங்குக அவர் புகழ்!

**Dr. Shan A. Shanmugavadivel & Associates**
**டாக்டர் அ. சண்முகவடிவேல்**
**Orthodontics Implants**
பற்களுக்கு கிளிப் போடுவதிலும் Implant பல் கட்டுவதிலும் பயிற்சி பெற்றவர்
**RAINBOW VILLAGE DENTAL OFFICE**
**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario, M1K 5J8**
**Monday to Saturday**
Near Kennedy Subway (Rainbow Village Building)
**416-266-5161**
**MAIN SQUARE DENTAL OFFICE**
**7-2575 Danforth Avenue, Toronto, ON. M4C 1L5**
Mon, Tues, Wed, Thurs, Fri, Sat & Sun - Near Main Subway
Dr. Shan - (Wedn), Dr. Kalaichelvan (Thurs & Sun)
(Free consultations on alternate Sundays)
Dr. Yao San Other days)
**416-690-0121**





# நான் கண்ட ஆத்மஜோதி

**செ. சோமசுந்தரம் (இளைப்பாறிய ஆசிரியர்)**

நான் ஆசிரியராகக் கடமையாற்றிய தொடக்க காலத்தில் ஆத்மஜோதி சஞ்சிகை வாசிப்பதுண்டு. ஆன்மீக தத்துவங்களை இலகு தமிழ்நடையில் சுவையூட்டும் கதைகளாகக் கொண்டு வெளிவந்தபடியால் அதை நான் விரும்பி வாசித்தேன். ஆனால் அதன் ஆசிரியர் நா. முத்தையா அவர்களைக் கண்டதும் இல்லை கதைத்ததும் இல்லை. காணவேண்டும் என்ற ஆவல் ஏற்படவும் இல்லை.

1964ம் ஆண்டு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இருந்து வெளியேறிய பின் கம்பளை முஸ்லிம் மகாவித்தியாலத்துக்கு உதவி ஆசிரியராக நியமனம் பெற்றேன். நாவலப்பிட்டி கதிரேசன் பாடசாலையில் அவர் கடமையாற்றுவதாக அறிந்தேன். அப்போது என்னுடன் வசித்த ஏனைய இரு ஆசிரியர்களும் அவரைப்பற்றி மிக உயர்வாகவும், அவருடைய பாடசாலையில் கடமையாற்றும் ஏனைய ஆசிரியர்களைப் பற்றியும், பாடசாலையில் நடக்கும் நிகழ்ச்சிகள் பற்றியும் கதைப்பார்கள்.

ஒரு வெள்ளிக்கிழமை நானும் என்னுடன் இருந்த சக ஆசிரியரும் சேர்ந்து நாவலப்பிட்டி கதிரேசன் கோயிலுக்குப் போனோம். கோயிலில் ஆத்மஜோதி அவர்கள் கூட்டுவழிபாடு செய்வதையும், நாமபஜனை செய்வதையும் கண்டேன். சிவந்த அழகிய மேனியும், நெற்றிநிறையத் திருநீறும், திறந்த மேனியில் உருத்திராட்ச மாலையும், முக்கதிர் ஞான ஒளியும், காந்தக் கண்களும் கொண்ட இளமைப் பருவத்தைப் பார்த்து இந்த இளம் பராயத்தில் இப்படி ஒருவர் ஆன்மீக வாழ்வு வாழ்கிறாரா என்று அதிசயப்பட்டேன். முதன்முதலாக அவரை கண்டகாட்சி இன்னும் என் நினைவில் பசுமையாகவும் ஆழமாகவும் பதிந்து இருக்கிறது. அவருடன் போய் கதைக்க விரும்பினேன். ஏதோ ஒருவித பயம் அவர் அருகே செல்லத் தடுத்தது. அன்று இரவு வீடு திரும்பியதும் சக ஆசிரியரிடம் அவரைப் பற்றியே கேட்டு அறிய ஆவல் கொண்டேன். அவர் ஒரு இந்திரிய ஆசைகளை அடக்கிய ஆன்மீக சிந்தனையாளர் என்றார். அவருடைய அழகிலும் குணத்திலும் இரு பெண்கள் மயங்கி விவாகம் செய்ய அலைந்து திரிந்தும் முடியாமல் போய்விட்டது என்றார். பிரமச்சாரீயம் பூண்டவர், தியானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராணயாமம் செய்பவர், தூய்மையான ஒழுக்கமாக வாழ்பவர், மிகவும் வைராக்கியமும் உள்ளவர் என்றார். எல்லாச் சாதகர்களாலும் எல்லாச் சாதனைகளையும் செய்ய முடியாது, பகவானே அவரை அப்படி சிருஷ்டி செய்திருக்கிறார் என்றார்.

அதன் பின்பு இப்பெரியாருடன் பழகும் வாய்ப்பு எனக்கு உண்டாகியது. விவோகானந்தரை ஒத்த ஆத்மாக்கள் இங்கும் இருக்கிறார்கள் என்று எண்ணினேன். அப்போ நாவலப்பிட்டியில் அவருக்கு இருந்த மதிப்பைப் பார்த்து அவரின் மதிப்பை அவரில் பழக்கமில்லாதவர் புரிந்து கொள்ள முடியாது என்று எண்ணினேன். ஈழநாட்டிலும் பல ஆன்மீக சிந்தனையாளர் காலத்துக்குக் காலம் அவதாரம் செய்கிறார்கள் என எண்ண வைத்தது.

நாவலப்பிட்டியில் அவருடன் சொற்ப காலந்தான் பழகினேன். அச் சொற்ப காலத்தில் அவரிடம் அவதானித்த நற்பண்புகளால் அவரை ஒரு அவதார புருஷர் என்றே மதித்தேன். கள்ளம் கபடமற்ற ஒழிவு மறைவு அற்ற தூய உள்ளம் படைத்தவர். பொறாமை, பேராசை, அகங்காரம், எதுவும் அற்றவர். மனித இனத்தை நல்லாற்றுப் படுத்தும் உயர்ந்த சிந்தனைகள், மெதுமையாகவும் இனிமையாகவும் உரையாடும் தன்மை, ஆடம்பரத்தை வெறுத்தல், பிறரை வாழவைக்க வேண்டும் என்ற ஆசை, வார்த்தைகளை அளந்து பேசுதல், எப்பொழுதும் முகமலர்வு, தமிழ் உணர்வு போன்ற பண்புகளால் நாவலப்பிட்டியில் தமிழ் மக்களின் அன்பையும் கௌரவத்தையும் பெற்றார்.

நாவலப்பிட்டியில் பாடசாலைப் பணிகளை விட தமது பலவிதமான பத்திரிகைப் பணிகளிலும், வாரஇறுதி நாட்களில் தேயிலைத் தோட்டங்களின் மத்தியில் வசிப்பவர்களின் இல்லங்களில் பிரார்த்தனைகளிலும் பஜனைகளிலும் ஈடுபட்டுத்திரிவதைக் கண்டேன். இவரின் இந்தத் தன்னலம் அற்ற சேவையினால் சிலர் இவரின் பாதங்களைத் தொட்டு வணங்குவதையும் அவதானித்தேன். பாடசாலையில் இவரின் கடமை உணர்ச்சிகளையும், சக ஆசிரியர்களையும் தன்னைப்போல் கடமை உணர்ச்சிகளில் மேம்படுத்துவதையும் அறிந்திருக்கின்றேன். மற்றவர் மனதை பக்குவம் செய்யும் முறைகளை நன்கு உணர்ந்தவர். பாடசாலைப் பிள்ளைகள் மத்தியில் உதவிசெய்வதிலும் ஆனந்தம் காண்பவர். வகுப்பில் சைவசமயம் நடத்தும் பாணி தன்னிகரற்றது. பாடசாலையில் உயர் வகுப்பு வரை தானே சமயம் போதித்தவர். நாவலப்பிட்டியில் ஆன்மீக சஞ்சிகையை வெளிப்படுத்தி அதன்மூலம் ஆத்மீக





அலைகள் வீசச்செய்தார். இவரால் சமயச்சஞ்சிகையும் பிரபல்யம் பெற்றது. நாவலப்பிட்டியில் தமிழ் மக்கள் மத்தியில் பயிருக்கு நீர் போல் விளங்கினார் என்றால் மிகையாகாது.

அப்போ கண்டி கல்விக்கந்தோரில் தமிழ் பாடசாலைகளுக்குக் கல்வியதிகாரியாகக் கடமையாற்றிய திரு விசுவலிங்கம் அவர்கள் என்னைக் கம்பளையில் இருந்து கண்டி இந்து மகாவித்தியா லயத்துக்கு மாற்றம் செய்தார். அதன்பின் ஆத்மஜோதி அவர்களுடன் பழகும் சந்தர்ப்பம் குறைந்தது. அதன் பின்பு அவர் யாழ்ப்பாணம் போகும்போதோ கொழும்பு செல்லும்போதோ தலைமையாசியரியர் திரு மதியாபரணம் வீட்டில் தங்குவார். அப்போ நானும் போய் சில சமயம் பாடசாலையில் தங்குவோம். இரவில் ஒரு சாமத்தில் எழும்பி மணித்தியாலக் கணக்கில் தியானத்தில் இருந்து விடுவார். அக்காலகட்டத்தில் அவரின் தூய வெண்ணிற வேஷ்டியும் வெள்ளை நாஷனல் சேட்டும் விசிறிமடிப்பு சால்வையும் இன்னும் என் மனதை விட்டு அகலவில்லை.

நான் கண்டியை விட்டு வெளியேறியபின் கனடாவில் 1994ம் ஆண்டு அனைத்துலக சைவசித்தாந்த மகாநாட்டுக்கு வருகைதந்தபோது தான் திரும்பவும் கண்டு பழகச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. கனடாவில் மொழியையும் சமயத்தையும் வளர்க்க வேண்டி 03-07-94ல் அவரது உத்தமசீடர் திரு. சிவ. முத்துலிங்கம் வீட்டில் ஒன்ராறியோ இந்து சமயப் பேரவையைத் தொடக்கி வைத்தார். அவரது வருகையின் பின் கனடாவில் தமிழும் சமயமும் புத்துணர்ச்சி பெற்றது எனலாம்.

யோகர்சுவாமியைப்போல் தெய்வத்தோடு உறவாடிய இந்த மகான் இரண்டுமுறை கண்களில் இருந்து நீர்சொரிய அழுததைக் கண்டேன். ஒன்று 1983ம் ஆண்டில் நாவலப்பிட்டியில் ஆத்மஜோதி சஞ்சிகை அச்சுக்கூடமும், இவர் வாழ்நாள் முழுதும் இந்தியா முதலிய இடங்களில் விரும்பிச் சேர்த்த ஆன்மீக நூல்களும் எரியும்போது கண்ணீர் விட்டு அழுதார். பின்பு பொறுமையுடன் அதை சகித்துக் கொண்ட தன்மை வியக்கத்தக்கது.

இரண்டாவதாக கனடாவில் எனது இல்லத்தில், குடும்பப் பற்றே இல்லாமல் வாழ்ந்த தனக்கு வயதுபோன காலத்தில் ஆண்டவன் 67 அநாதைப்பிள்ளைகளை ஒப்படைத்திருக்கிறானே என்று கண்ணீர் விட்டு அழுதார்.

இறக்கும்வரை இளம் சமுதாயத்தை இலக்காகக் கொண்டும், வயது முதிர்ந்தவர்களுக்குப் பாதயாத்திரையை இலக்காகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டும் வாழ்ந்த இப்பெரியார் ஒரு அவதாரபுருஷர் என்பதே என் அபிப்பிராயம். அவதார புருஷர் என்பவர் பந்தத்தில் நின்று விடுபட்டு அன்பு என்னும் பெருவெள்ளத்தை அள்ளிப்பருகி அதை பருகாத ஏனையோரும் பருக வேண்டும் என்ற இரக்கம் நிறைந்த சிந்தனையால் தமது நிலையில் இருந்தும் இறங்கி வந்தவர்கள். நல்லவராக இருந்து நல்லதையே செய்து இந்த மகான் 77 ஆண்டுகள் நம் மத்தியில் வாழ்ந்து தன்னைப் போற்றிய மண்ணான கனடாவுக்கே தன் உயிரையும் தந்தார்.

இன்னும் அவருடைய ஆத்மா இந்து சமயப் பேரவையில் ஜெகஜோதியாக விளங்கி ஒளிவீசிக்கொண்டு இருக்கிறது என்று அவருடன் இரண்டறக் கலந்து பழகிய உத்தமசீர் சிவ முத்துலிங்கம் கூறுவார். இறந்தும் இறவாமல் நம் மத்தியில் புகழ் உடம்புடன் வாழ்கிறார் என்றும் கூறுவார். மக்களை ஆத்மீக நெறியில் உயர்த்துவதற்காகப் பிறப்பெடுத்த ஆத்மீக குருமார் தங்கள் கொள்கைகளில் நம்பிக்கையும் பற்றும் உள்ளவர்களை ஆட்கொள்வது வழக்கம். ஆத்மீக போதனையை தம் வாழ்வின் லட்சியமாகக் கொண்ட ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் மாதாந்த நட்சத்திர திதியாகிய சதயத்தில் அன்று அவருடைய சீடர் சிவ முத்துலிங்கம் அவர்கள் பஜனையும் பிரார்த்தனையும் இன்னும் செய்வது போற்றத்தக்கது.

"அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை
இருள் சேர்ந்த இன்னாஉலகம் புகல்." - குறள் 243

ஆத்மஜோதி அருள்ஜோதியாக பிரகாசிக்குக.

வாழ்க ஆத்மஜோதி!
வளர்க ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை!

---

**ஆத்மஜோதி சுவாமிகளின் அருள்மொழிகள்**

மகான்கள் பூத உடலோடு வாழுங் காலங்களில் அவர்களது திருச்சமூகம் எவ்வாறு ஆத்மீக அலையால் சூழப்பட்டிருக்குமோ அவ்விதமே அவர்கள் சமாதியிலும் ஆத்மீக அலை ஒன்று சூழ்ந்திருப்பதைக் சாதகர்கள் இலகுவாக அறிந்து கொள்ளலாம்.





# சென்னை சைவசித்தாந்த மன்றத்தின் நூற்றாண்டு விழா

எல்லாம் வல்ல சிவபெருமானின் திருவருளால் தமிழ்நாட்டுச் சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் நூற்றாண்டு விழா சிதம்பரத்தில் யூலாய் மாதம் 22, 23, 24ஆம் நாட்களில் வெகுசிறப்பாக நடந்தேறியது.

விழா ஒருங்கிணைப்புக் குழுத்தலைவராக டாக்டர் ஏ.எம்.சுவாமிநாதன் அவர்களும் செயலாளராக திரு. சி. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் பொருளாளராக திரு. க. கிருசுணன் அவர்களும் பணியாற்றினர்.

07-07-1905ல் தொடங்கப்பெற்ற இம்மன்றம் கடந்த நூற்றாண்டு காலமாகத் தமிழ்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சைவசித்தாந்த நெறியை வளர்த்தெடுக்க முன்னின்று உழைத்து வந்திருக்கின்றது. மன்றத்துக்கு ஆத்மஜோதி வாசகர்கள் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

- ஆசிரியர்

# தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவி ஆலய மஹோற்சவம் - 2005

தெல்லிமா நகரில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் எல்லாம் வல்ல ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்த திருவிழாக்கள் ஆவணி 19ஆம் நாள் (04-09-2005) ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் தொடங்கி ஆவணி 31ம் நாள் (16-09-2005) வெள்ளிக்கிழமை வைரவர் பொங்கலுடன் நிறைவு பெறவுள்ளன.

தேவஸ்தான கணக்குள்ள வங்கிகள்:

| | |
|---|---|
| இலங்கை வங்கி, சுன்னாகம் | கணக்கு இல: 3155 |
| வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம் | கணக்கு இல. 1060012692 |
| இலங்கை வங்கி, பம்பலப்பிட்டி | கணக்கு இல. 718488 |
| வர்த்தகவங்கி, சுன்னாகம் | கணக்கு இல. 1107000214 |

இம்மகோற்சவ காலங்களில் கனடாவாழ் அம்பாள் அடியார்கள் அம்பாளை நினைந்துருகி வழிபாடு செய்து உய்தியடைய வேண்டுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்பொனியில் திருவாசகத்தை வடிவமைத்தது சரியா?

தமிழகத்தின் பிரபல திரையுலக இசையமைப்பாளர் திரு. இளையராஜாவின் இசையமைப்பில் உருவான “சிம்பொனியில் திருவாசகம்” எனும் ஒலியாக்கம் திருக்கோவில்களிலும் இல்ல வழிபாடுகளிலும் பக்தர்கள் அதனை பாரயணமாகப் பயன்படுத்துவது பக்தி இசைக்கு ஏற்றதல்ல என்று திருமுறைகள் திருவாக்கு திருப்பீடத்தின் தவத்திரு பாலயோகி சுவாமிகள் வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

சைவசமயத்தின் அருளாளர்களால் அருளப்பெற்ற பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையான திருவாசகத்தை மரபு நீங்கிய முறையில் மாற்று இசைகளுடன் இசைச்சிதைவு செய்துள்ளது பெரும் வருத்தம் அளிக்கிறது.

தமிழகத்தில் சம்பந்தப்பட்ட சைவசமயப் பெரியோர்கள், தமிழிசையறிஞர்கள் ஆகியோரின் ஆலோசனை இன்றி, தமிழ்இசை - இலக்கிய-வரலாறுகளின் அருட்களஞ்சியமான திருவாசகத்தின் உருமாற்றத்தையும் மேலைநாட்டுப் பாரம்பரிய இசைக் கலவையையும் முறையாகச் சமயத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

உயரிய தமிழ் பக்தி இலக்கிய நூலில் இருந்து பாடல்களை சிதைத்தும் நமது பாரம்பரிய தமிழ் இசையைக் கலைத்தும் உலகளாவிய வகையில் வியாபார நோக்கோடு செயற்பட்டிருப்பதும் இதுவே முதன்முறை என்று நம்பப்படுகிறது.

‘திருவாசகம்’ எனும் அருட்சொல்லுக்குள் நமது தமிழிசை மரபு அற்ற நிலையையும் மேலை நாட்டுப் பாரம்பரிய இசைவடிவங்கள் கைகோர்த்தாடுவதும் காலம்காலமாக நம்நாட்டில் திருமுறை இசை பயின்றுவரும் இளைஞர்களுக்கும் பயிற்றுவிக்கும் திருமுறையாளர்களிடமும் பெரும் வருத்தத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

சென்னையில் இயங்கும் தமிழ் மையம் எனும் நிறுவனமும் அதன் தலைவர் அருட்திரு ஜெகத்கெஸ்பர் ராஜ் பாதிரியார் அவர்களும் இசையமைப்பாளர் அவர்களும் இந்த மாபெரும் தவறுக்கான பொறுப்பை ஏற்க வேண்டும். நமது வழிபாட்டுக்குரிய பக்தி இலக்கியங்களை பொறுப்பற்ற வகையில் மரபுகளை மீறி தமிழ் மொழி, தமிழிசைச் சிதைவுகளைச் செய்து இனிவரும் காலங்களில் பலரும் சாதனை படைக்க முயலலாம். எனவே, இதனை





முறையாக தடுக்கும் விண்ணப்பத்தை தமிழக அரசுக்கும் இந்து அற நிலையத்துறை அமைச்சுக்கும் சமயச் சான்றோர்களுக்கும் அனுப்புவதற்கு திருப்பீடம் ஆராய்ந்து வருகிறது.

மலேசியாவிலுள்ள தேவஸ்தானங்கள், இந்துசமய இயக்கங்கள், தமிழ்மொழி, இசை இயக்கங்கள் மற்றும் திருமுறை ஆசிரியப் பெருமக்களின் கருத்துக்களை உணரவும் ஆய்வு செய்யவும் அதற்கான ஒருநாள் சமயக் கருத்தரங்கும் விரைவில் கூட்டப்படும்.

இந்த அறிக்கையைக் காணும் மேற்கண்ட பெருமக்களின் உயரிய கருத்துக்களைத் திருப்பீடம் அறிய விழைகிறது. கருத்துக்களை எழுத்து வடிவமாக அனுப்பலாம்.

Balayogi Swamikal
Thirumurugan Thiruvakku Thirupeedam
15, Jalan 1/6 Old Town
46000 Petaling
Jaya, Malaysia.
அல்லது
0166890615 என்ற தொலைபேசிவழி தொடர்பு கொள்ளலாம்.

ஸ்காபரோ நகரில் உங்கள் சகலவிதமான தேவைகளுக்கும் அறுசுவை உணவு வழங்குபவர்கள்

**நியூ தேவி உணவகம்**

**இலங்கை, இந்திய உணவு வகைகளிற் கை தேர்ந்த நிபுணர்கள்**

தினமும் இடியப்பம் (வெள்ளை, சிவப்பு), பிட்டு, இட்லி, தோசை, வடை, வாய்ப்பன், மோதகம், பற்றிஸ் மற்றும் பல்வேறு உணவுகளை காலை 9:00 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை சுடச்சுட பெற்றுக்கொள்ளலாம்

விரத நாட்களில் விசேட மரக்கறிகளுடன் வடை பாயாசமும் பரிமாறப்படும்

**1877 Lawrence Ave. East, Scarborough, ON (Lawrence & Pharmacy)**

**Tel: 416-288-0303**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவினை மாளும் சிவகதி சேரும்

சித்தாந்த ரத்தினம், சைவசித்தாந்த கலாநிதி க. கணேசலிங்கம்

உலக வாழ்வு நிலையானதல்ல. அதற்காக அதனைவிட்டு நீங்க முடியாது. பிறவி எடுத்த பின் குறிப்பிட்ட காலம்வரை வாழவே வேண்டும். இது இயற்கை நியதி.

வாழும் காலத்தில் நன்றாக வாழவேண்டும். சிறுமைகள் நீங்கிச் செம்மையாக வாழ்வதே நல்வாழ்வு. அதுவே பயனுள்ளது. வள்ளுவப் பெருந்தகை இதனை "வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல்" எனக் குறிப்பிடுகின்றார். இத்தகைய வாழ்வைக் கொண்டவர் வானத்துத் தேவரை ஒப்பர் என்றும் கூறுகிறார்.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.'. - குறள் 50

## சிவகதி சேரும்

ஒருவன் செய்யும் செயலின் பலனை அவனே அனுபவிக்க வேண்டும். சமயங்கள் பலவும் இக்கருத்தைக் கொண்டுள்ளன. நற்செயலின் பலனாக இன்ப அனுபவம் கூடுகிறது. தீய செயலின் பலனாகத் துன்ப அனுபவம் சேர்கிறது.

உலக வாழ்வு முடிந்ததும் ஒருவன் செய்த நல்வினைக்கு ஏற்ப அவனுக்கு இன்பம் அனுபவிக்கும் நிலை உண்டாகிறது. இந்நிலை சொர்க்கம் எனப்படுகிறது. தீவினை செய்தவனுக்கு அதன் பயனாகத் துன்பம் அனுபவிக்கும் நிலை உண்டாகிறது. இந்நிலை நரகம் எனப்படுகிறது. வாழ்வு முடிந்த பின் ஒருவன் தான் செய்த தன் வினைக்கேற்ப சொர்க்கத்தையோ, நரகத்தையோ அடைகிறான். இது அவனுக்கு நிரந்தர சொர்க்கமாக அல்லது நிரந்தர நரகமாகவோ (Eternal Heaven or Eternal Hell) அமைந்து விடுகிறது. இதிலிருந்து அவனுக்கு மீட்சி இல்லை. இது கிறிஸ்தவம் போன்ற அன்னிய மதக் கொள்கை. சைவம் இதனை ஏற்பதில்லை.

பிழை செய்வதும் திருந்துவதும் மனித இயல்பு. வாழ்வியல் அனுபவங்களால் மனிதன் மட்டுமன்றி எல்லா உயிர்களும் திருந்துகின்றன. தீவினைப் பலனாகத் துன்பமுறும் உயிர் திருத்தமடைந்து நல்வினை செய்ய முற்படுகிறது. இந்த வழியில் அது வளர்ச்சி பெறுகின்றது. எடுத்த பிறவிகள் எல்லாவற்றிலும்





உயிர் வளர்ச்சி அடைந்து வருகிறது. இறுதியில் செம்மை பெற்ற சிறந்த ஒரு நிலையை அடைகின்றது. அதன் வளர்ச்சியில், அது பெறும் இன்ப நிலையான சொர்க்கமும் துன்ப நிலையான நரகமும் நிரந்தரமல்ல. எந்த உயிரும் இறுதியில் செம்மை சேர் நிலையை அடையும். சிவப்பேறு பெறும். இது உயிர் அடையும் சிவகதி அல்லது சிவப்பேறு. இதுவே சைவத்தின் அறிவுசார் கொள்கை.

தாய் தன் குழந்தையோடு உடனிருந்து, அதன் செயல்களில் பங்கு கொண்டு அதனை வளர்க்கிறாள். உடனாக இருப்பதன்றித் தானும் குழந்தையும் வேறல்ல என்று கூறும்படி ஒன்றாகவே இருக்கின்றாள். இங்ஙனம் உடனாயும் ஒன்றாயும் இருந்தாலும் அவள் குழந்தையின் வேறானவளே. இது போன்ற நிலையில் சிவனும் உயிருடன் ஒன்றாய் உடனாய் வேறாய் இருந்து அதனை வளர்த்து வருகின்றான். உயிருக்கு இறைவன் செய்யும் இப்பேருபகாரம் பிறவிகள் தோறும் தொடர்ந்து நடைபெறுகிறது. இதனை உணர்ந்தால் நாம் எடுத்த இப்பிறவியில் நன்றாக வாழலாம். நல்ல கதி கிடைக்கும் என்ற நம்பிக்கை பிறக்கும். இந்த நம்பிக்கையை ஊட்டி நல்வழி காட்டுகிறார் ஞானசம்பந்தப் பெருமான்.

இறைவன் இறைவியுடன் இருந்து எமக்கு அருள்புரிகிறான். தன்னிலையில் செம்மையே ஆன சிவனாக இருக்கும் அவன், அருளும் நிலையில் சக்தியுடன் தோன்றுகிறான். சிவனின் பிரிவில்லாதது அவனின் அருட்சக்தி. சீர்காழித் திருக்கோயிலில் சம்பந்தப் பெருமானுக்கு மூன்று வயதில் காட்சி கொடுத்து ஞானப்பால் ஊட்டிய பெருமான், அம்மை அப்பர் வடிவிலேயே தோன்றினார். இது அவனின் தொன்மைக் கோலம்.

பெண்ணின் நல்லாளாகிய அம்பிகையோடு சிவபெருமான் இருந்து அருள் புரிகிறான். அவனை வழிபடுவதால் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம். தீவினை தாக்காது நல்ல கதியாகிய சிவகதி பெறுவோம். இதில் ஐயமில்லை. கருதியது கிடைக்கும் என்று கூறிச் சம்பந்தப் பெருமான் எம்மை நெறிப்படுத்துகிறார். இது குறித்த அவரின் தேவாரம் வருமாறு:

'மண்ணின்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணின்நல் ல.்.துறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருவைந்தெழுத்து

மந்திரங்களில் மேலான மந்திரம் 'நமசிவாய' என்னும் திருவைந்தெழுத்து மந்திரம். இது சிவபரம் பொருளின் திருப்பெயராகவும் உள்ளது. நால் வேதங்களின் மெய்ப் பொருளாக இருப்பது இது என்று ஞானசம்பந்தர் கூறுகிறார். "வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே" என்று கூறி இதன் சிறப்பை அவர் விளக்குகிறார். 'நமச்சிவாய' என்ற மந்திரம் உச்சரிக்கும்போது அல்லது சிவநாமமாக ஓதும்போது 'நமச்சிவாய' என்றாகிறது.

காயத்திரி மந்திரத்தை மேலான மந்திரமாகச் சிலர், குறிப்பாகப் பிராமண குலத்தினர், கொள்வதுண்டு. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பிராமண குலத்தில் தோன்றியவர். அவருக்கு ஏழு வயதானதும் அவரின் குலவழக்கப்படி உபநயனச் சடங்கு (பூணூற் சடங்கு) நடைபெறுகின்றது. காயத்திரி மந்திரம் ஓதி இச்சடங்கு நடத்தப்படுகின்றது. இதன் முடிவில் சம்பந்தப் பெருமான் அருளிய திருப்பதிகததில் திருவைந்தெழுத்தின் பெருமையும் சிறப்பும் பேசப்படுகிறது. அதில் ஒரு திருப்பாடல் வருமாறு:

'மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே.'

இப்பாடல் மூலம் நான்மறையாக நிற்பதும், வானத்துத் தேவரின் சிந்தையில் நின்று அவரை வளர்ப்பதும், தீ வளர்த்து வேள்வி செய்யும் அந்தணர் குலத்தவருக்கு அவர்களின் இறுதிக் காலத்தில் உறுதுணையாய் நிற்பதும் ஐந்தெழுத்து மந்திரம் என்று விளக்கப்படுகிறது. இதனால் திருவைந்தெழுத்து என்னும் பஞ்சாட்சர மந்திரமே எல்லா மந்திரங்களுக்கும் மேலானது என்ற உண்மை தெளிவாகிறது.

### காரண பஞ்சாட்சரம்

சிவனருளால் நல்ல வண்ணம் வாழ்வதற்கும் சிவகதி





பெறுவதற்கும் அனைவரும் பின்பற்றக்கூடிய ஒரு வழியைத் திருமூலர் காட்டுகிறார். "சிவசிவ" என்ற மந்திரத்தை ஓதுவதன் மூலம் இது கைகூடும் என்பது அவரின் அறிவுரை.

சைவர்களின் சிறந்த சாதனமாக விளங்குவது திருநீறு. அதனைப் பூசும்போது "சிவசிவ" என்று சொல்லிப் பூசவேண்டும். அதனால் திருநீறும் மந்திரமாகிறது. "மந்திரம்" என்பது நினைப்பவரை அல்லது ஓதுபவரைக் காப்பது என்ற பொருள் தருவது. திருநீறும் பூசுபவரைக் காப்பதால் மந்திரமாகக் கொள்ளப்படுகிறது. "மந்திரமாவது நீறு" என்ற சம்பந்தப்பெருமானின் தேவாரத்தொடர் இதனை விளக்குகிறது. "சிவசிவ" என்று ஓதிப் பூசுவதால் திருநீறு பூசுபவருக்குக் காவலாக அமைந்து சிவகதிக்கு வழிவகுக்கிறது. "சிவசிவ" என்பது காரண பஞ்சாட்சரம் எனப்படும்.

பல வழிகளில் பலர் தீவினை செய்கிறார்கள். எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றின் வழியில் தீவினை செய்பவரைத் தீவினையாளர் என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். தீவினையாளர் என்ற இச்சொல் முன்பு தீவினை செய்தவர், இன்று செய்பவர், இனிச் செய்பவர் ஆகியவர்களைக் குறிப்பதாக அமைந்துள்ளது.

திருமுறை ஓதல், மந்திரம் சொல்லல், இறைவழிபாட்டில் ஈடுபடுதல் ஆகியவற்றுக்கும் ஒருவித பக்குவ நிலை வேண்டும். இது தீவினையாளர்க்கு இருப்பதில்லை. அவர்கள் "சிவசிவ" என்று சொல்லும் நிலையில் இல்லாதவர்கள். "சிவசிவ" என்கிலர் தீவினையாளர் என்று திருமூலர் கூறுகிறார்.

ஒருவனின் ஆன்மீக வளர்ச்சிக்கு முதலில் அவனின் தீவினை நீங்க வேண்டும். தத்துவத்துறையில் வினை என்பது செயலையும், செயலின் பலனையும் குறிக்கும். தீவினையின் தாக்கம் இருக்குமட்டும் இறைநாட்டம் ஏற்படாது. வினைப்பயனை அனுபவித்துத் தீர்க்க வேண்டும் என்பது பொதுநியதி. ஆனாலும் சிவனருளால் இதனை மாற்றலாம் என்பது அருளாளரின் செயலாலும் உரையாலும் அறியக்கூடியதாக இருக்கிறது. "சிவசிவ" மந்திரம் இதற்குத் துணைபுரிகிறது. "சிவசிவ என்றிடத் தீவினை மாளும்" என்பது திருமூலரின் திருவார்த்தை.

### வானுலகும் சிவகதியும்

தீவினை மாளும்போது எஞ்சியிருப்பது முன்செய்த நல்வினைப் பலன்களே. நல்வினைப் பலன்களாகிய புண்ணியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ப அனுபவங்களாக வருகின்றன. புண்ணியங்கள் செய்தவர்கள் வானுலகத்துத் தேவர்களாகும் நிலையை அடைவதுமுண்டு. இந்த நிலையும் "சிவசிவ" என்று ஓதுவதால் கிட்டும் என்று திருமூலர் கூறுகிறார். "சிவசிவ என்றிடத் தேவருமாவர்" என்ற திருமந்திரத் தொடர் இதனை உணர்த்துகிறது.

தேவர்களாக இருப்பவர் தம் புண்ணிய மிகுதியால் அந்நிலையை அடைந்தவர்கள். வானுலகத்தவர் என்னும் மேலான நிலையில் இருப்பவர் தாங்கள் என்ற கர்வம் அவர்களுக்கும் உண்டு. இக்கர்வத்தின் மூலம் ஆணவமலம், அவர்கள் தம் புண்ணியப் பலனான இன்பத்தை அனுபவித்துத் தீர்த்தபின் மீண்டும் மண்ணுலகில் வந்து பிறக்க நேரிடும். மண்ணுலகில் பிறந்து ஆன்மீக சாதனைகளில் ஈடுபட்டு முத்தி அல்லது விடுதலை பெறலாம். திருமுறை ஓதல், ஞான நூல்களைக் கற்றல், தெளிதல், சிவநெறியில் நிற்றல், சிவப்பணி செய்தல் ஆகியவை எல்லாம் ஆன்மீக சாதனைகளே. சைவசமயம் இவற்றை வகைப்படுத்திச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற படி நிலைகளில் விளக்குகிறது. இவற்றில் நின்று "சிவ சிவ" மந்திரத்தை ஓதிச் சிவமாந்தன்மை பெறலாம். "சிவசிவ என்றிடச் சிவகதி தானே" என்பது இது குறித்த திருமந்திரத் தொடர்.

**படிநிலை வளர்ச்சி**

"நமசிவாய" என்பது பஞ்சாட்சரம் எனப்படும் ஐந்தெழுத்து மந்திரம். இதன் நுண்மையாக இருப்பது "சிவாயநம" என்னும் சூக்கும பஞ்சாட்சரம். இதனிலும் நுண்ணியமானது சிவாய அதிசூக்கும பஞ்சாட்சரம். "சிவசிவ" என்னும் காரண பஞ்சாட்சரம் இதைவிட நுண்மையானது. இதற்கு அடுத்த நிலையில் நுண்மையாக இருப்பது மகாகாரண என்னும் பஞ்சாட்சரம். திருமந்திரம் இவை குறித்த விளக்கத்தைத் தருகிறது. (விரியும் என அஞ்சி இவை இங்கு விளக்கப்படவில்லை)

"சிவசிவ என்கிலர்" எனத் தொடங்கும் திருப்பாடல் காரண பஞ்சாட்சரம் குறித்த திருமந்திரப் பாடல்களில் ஒன்று. இப்பாடலின் பொருள் விளக்கம் தெளிவானது. ஆயினும் இதன் மூலம் ஒருவனின் ஆன்மீக வளர்ச்சியை நான்கு நிலைகளில் வைத்துத் திருமூலர் உரைப்பதை உணரலாம்.

முதல் நிலையில் தீவினையின் தொடர்புள்ளவர் பற்றிக் குறிப்பிடுகிறார். பொதுவாக மண்ணில் பிறந்த பலரும் இத்தொடர்பு





உடையவர்களாகவே இருக்கிறார்கள். இவர்கள் "சிவசிவ" என்று ஓதமாட்டார்கள். அதற்கான பக்குவ நிலை இவர்களுக்கு இல்லை.

இரண்டாவது நிலையாக, இம்மந்திரத்தை ஓதுவதால் தீவினை தாக்காது நீங்கிவிடும் என்பதை உணர்த்துகிறார். ஆன்மீக வளர்ச்சியில் முக்கியமான நிலை இது.

மூன்றாவது நிலையில், தீவினை நீங்கிய பின் நல்வினைப் பலனான இன்ப அனுபவம் பெறும் தேவரின் நிலை பேசப்படுகிறது. இதுவே முடிந்த நிலையல்ல.

நான்காவது நிலையில், ஆன்மீக வளர்ச்சியின் முடிநிலையாகச் சிவகதி கூறப்படுகிறது. வானுலகத் தேவரும் இன்பம் அனுபவித்துத் தமது புண்ணிய பலன் தீர்ந்தபின் மண்ணுலகில் பிறந்து சிவகதி அடைய வேண்டுமென்று உணர்த்தப்படுகிறது.

ஆன்மீக வளர்ச்சியடைந்த இந்நிலைகளைப் பெறுவதற்கு சிவ சிவ என்னும் காரண பஞ்சாட்சரம் துணைபுரியும் என்பதைத் திருமூலர் விளக்குகிறார்.

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்றிடச் சிவகதி தானே.

சைவநீதி, பார்த்திப சித்திரை

## இந்து சமயப் பேரவைச் செய்திகள்

மொன்றியல் அருள்மிகு முருகன் ஆலயத்தில் 04-09-2005 ஞாயிற்றுக்கிழமை திருவாசகம் முற்றோதலும் 05-09-2005 தெரிந்தெடுத்த திருப்புகழ் ஓதலும் ரொறன்ரோவில் இருந்து சென்றிருந்த பேரவையின் திருக்கூட்டத்தினரால் நிகழ்த்தப்பட்டன.. ஆலயத்தைச் சேர்ந்த அடியார்களும் இணைந்து கொண்டனர். ஆலயசைவமகாசபையினரால் நடத்தப்படும் பாடசாலை மாணவர்களுக்கு பேரவையின் காப்பாளர் கந்தவனம் அவர்களும் நாகேஸ்வரி கணேஸ் அவர்களும் அறிவுரை வழங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சற்குரு 'ஆத்மஜோதி' முத்தையா சுவாமிகள் காலத்தில் நான் அறிந்தவை

த.கு. சபாரத்தினம்

இந்து சமயத்தில் காலத்திற்கு காலம் பக்தர்கள், சித்தர்கள் ஞானிகள் எனப் பலர் தோன்றி எமது சமய வளர்ச்சிக்கு துணையாக நிற்கின்றார்கள். இறையருளுக்கு பாத்திரமான ஞானச் செல்வர்கள் யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற பெருநோக்கோடு மக்களையும் ஞானநெறிக்கு தயார்படுத்துவதற்காகவும் பணிகள் பல புரிந்தார்கள்.

அன்பையும் அருளையும் அறத்தையும் இணைத்து நிற்கும் பெருமை "இந்து" சமயத்திற்குரியது ஆகும். இந்த மூன்றினையும் இணைத்து வாழ்ந்த பெரியார்கள் பலர் நமது நாட்டிலும் வாழ்ந்தார்கள். இலங்கையைச் சிவபூமி எனத் திருமூலநாயனார் அழைத்தார். இலங்கையில் ஞானபூமியாகத் திகழ்வது யாழ்ப்பாண குடாநாடு ஆகும்.

முத்தையா சுவாமிகள் பிறந்த ஊர் ஏழாலை. நாவலப்பிட்டி கதிரேசன் மகாவித்தியாலயத்திற்கு தலைமை ஆசிரியராகப் பல ஆண்டுகள் சேவை புரிந்தார். அங்கு இருக்கும் சமயம் ஆத்மீகச் சிந்தனயாளராக சைவ ஆசாரத்தைப் பேணி வந்தார். அருளாளர்கள் தந்த ஞான அனுபூதி வாசகங்களாகிய பன்னிரு திருமுறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். சனி ஞாயிற்றுக்கிழமைகளில் கண்டி நாவலப்பிட்டி, மாத்தளை, பதுளை இன்னும் பல மலையக மக்கள் நலம் விரும்பி தோட்டங்களில் முதியோர்களுக்கும் இளைஞர்களுக்கும் கூட்டுவழிபாடும் நற்போதனையும் செய்து வருவது வழக்கம்.

அதனுடன் அச்சுக்கூடம் ஒன்றும் ஆரம்பித்தார் மக்களுக்காக. ஆத்மீக சிந்தனை உள்ள புத்தகங்கள் பல வெளிவர ஆரம்பித்தன. ஆத்மஜோதி சஞ்சிகை மாதம் ஒருமுறை வெளிவர ஆரம்பித்தது. அதன் மூலம் மக்கள் நல்ல ஆத்மிக சிந்தனையாளர்களாகக் கட்டுரைகளை எழுதினார். இந்திய திருத்தல யாத்திரை செய்து வந்தார். அங்கிருந்து பல ஞானிகளை தனது செலவில் இலங்கைக்கு கூட்டி வந்தார். சுத்தானந்த பாரதி, சுப்பிரமணியானந்தர் சச்சிதானந்தர், சச்சிதானந்த மாதாஜி போன்ற பல ஞானிகளை இலங்கையின் பலபாகங்களிலும் பேசவைத்தார். மக்கள் குருவருளையும் திருவருளையும் நன்கு அறியும் வண்ணம் சமயத்தைப் பரப்பினார். கோயில்களிலும், இல்லங்களிலும் சிறியோர் முதல்





பெரியோர் வரை கூட்டுவழிபாடுகள் செய்து வரும் வேளைகளில் திருத்தல யாத்திரை மூலம் கண்டி கதிர்காமம் சிங்கப்பூர் மலேசியா, யகத்தா, இந்தோனேசியா, கோலாலம்பூர் எனப் பல பாகங்கள் சென்று நற்போதனை செய்து பல ஞானிகளைச் சந்தித்து மக்களுக்கு நல்வழிகாட்டினார். 1983ம் ஆண்டு இலங்கையில் சிங்களவர்களால் கலவரம் ஆரம்பித்தது. அதேவேளை நாவலப்பிட்டியில் அவரின் அச்சுக்கூடமும் எரிக்கப்பட்டது. பலகோடி ரூபா மதிப்புள்ள புத்தகங்களும் எரிந்து விட்டன.

அதனால் அவர்கள் வடமாகாணம் சாவகச்சேரி சென்று குடியேறினார். அங்கும் ஆலயங்கள் தோறும் அடியார்கள் சகிதம் சென்று நற்சிந்தனைகள் நற்போதனைகள் செய்து வந்தார்கள். வடமாகாணத்துச் சப்த தீவுகள் எங்கும் சென்று சமய சொற்பொழிவு கூட்டுவழிபாடு செய்து வந்தார். நயினைதீவு, புங்குடுதீவுகளில் சுவாமி சதானந்தரின் வேண்டுதலால் பாதயாத்திரை செய்வதற்கு விரும்பினார் ஆத்மஜோதி. சுவாமி சச்சிதானந்தர், ஓம்காரணந்தா சுவாமி, தியாகராசனந்த நாகலிங்கசாமியார், வேல்சாமியார் போன்ற ஞானிகளுடனும் இன்னும் பல அடியார்களுடனும் நல்லூர் தேர் திருவிழாவிற்குப் பாதயாத்திரை செய்தும் வந்தார்கள். பாதயாத்திரை பஜனையுடன் செல்வது வழக்கம். இன்று ஆத்மஜோதி ஐயா, சுவாமி சதானந்தர், சுவாமி சச்சிதானந்தர், தியாகராசசுவாமிகள், நாகலிங்கசாமி, வேல்சாமிகள் சமாதியாகிவிட்டார்கள். ஆனால் இன்னும் நயினாதீவு, நல்லூர்கந்தன் தேர்திருவிழாவையொட்டி பாத யாத்திரை நடைபெறுகிறது. பாதயாத்திரை அடியார்கள் புங்குடுதீவில் உள்ள சதானந்தர் சமாதி சிவன் ஆலயத்தில் இரவு பஜனை கூட்டுவழிபாடுகளுடன் உணவும் உட்கொண்டு மறுநாள் தேர்திருவிழாவுக்கு போக ஆரம்பிப்பார்கள்.

ஆத்மஜோதி சுவாமிகள் சாவகச்சேரியில் இருந்தபொழுது பாதயாத்திரையாக வடமராட்சி தென்மராட்சியில் உள்ள ஆலயங்களுக்கு அடியார் திருக்கூட்டத்தில் நானும் ஒருவராக இணைந்து கொண்டேன். முதல்நாள் கால் சூடு பிடித்தது. மறுநாள் ஒன்றும் தெரியவில்லை. தொடர்ந்து 21 நாள்கள் பாதயாத்திரை சென்றோம். அவர் முத்தையாவாக இருந்து, முத்தையா சுவாமி களாகிவிட்டார். ஆத்மஜோதி ஐயாவிடம் நற்போதனைகளை உணர்ந்த சீடர்களில் திரு சிவமுத்துலிங்கம் அவர்கள் தொடர்ந்தும் ஆத்மீக சிந்தனையுடன் குருபூசைகளையும் திருமுறை முற்றோதலையும் செய்து வருகின்றார். வாரநாட்களில் நல்லூர் முருகன் ஆலயத்தில் வழிபாடு நடந்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாதவூரடிகள் புராணம்

திருப்பெருந்துறைச் சருக்கம்

வித்துவான் சைவசித்தாந்த பண்டிதர், சைவப்புலவர்
**கு.வி. மகாலிங்கம்**

பழமறை முழுதுணர்ந்தனர் பலர் தொழ நடமுயல்கின்றவர்
மழுவுழைகரமிசை கொண்டிடமருவிய கவுரி மகிழ்ந்திட
விழைதகு மிரசித பொங்கொளிவிடுமுயர் கயிலை விலங்கலி
னழகுறு தபனிய மண்டபமதனிடையருள்கொடிருந்தனர்.

பொ-ரை: பழைய நான்கு வேதங்களையும் ஓதியுணர்ந்த மகா பண்டிதர்களாகிய தில்லைவாழந்தணர்கள் மூவாயிரவர் தரிசித்து வணங்கக் கனகசபையிலே பஞ்சகிருத்திய நிருத்தஞ் செய்தருளும் சிவபெருமானானவர், மழுவையும் மானையும் திருக்கரங்களிற் கொண்டு தமது வாமபாகத்திற் பொருந்திய உமையம்மை திருவுள்ளம் மகிழ, எவரும் விரும்பத்தகும் வெள்ளியினது மிக்க ஒளியைவீசும் உயர்ந்த கைலாச கிரியின்கண்ணே, அழகு பொருந்திய சுத்தமாயாமயமாகிய செம்பொற்றிருக்கோயி லொன்றுண்டு. அதன்கண் மந்திரசிங்காசனத்தின் மீதே ஆன்மாக்களது தியானாதிகட்குத் தாமாகப்படுதல் வேண்டுமென்னும் திருவருளினாலே சத்திகாரியமாகிய உருவத்திருமேனி கொண்டு ஸ்ரீகண்டசரீரியாய் வீற்றிருந்தருளினார்.

(முழுதுமென்ன முற்றுமையும், விழைய என்னும் பெயரெச்சத்திலும் மண்படமென்பதன் பயனிலையும் விகாரத்தாற்றொக்கன. மண்டபமென்பதனிடை என்புழி அது பகுதிப்பொருள்விகுதியாம். வேதம் அநாதிநூலாகலிற் பழமறை யென்றும் நான்கையும் தழீஇக்கோடற்கு முழுதுமென்றும், இங்ஙனங் காணப்பட்ட தொன்றுகொண்டு காணப்படாததொன்றை அறிவிக்கின், அது அறிபவர்க்கினிது விளங்குமாகலின் காணப்பட்ட கனகசபையின் கண்ணே திருநடனஞ் செய்தருளும் சிவபெருமானானவர் காணப்படாத கைலாயக்கிரியின் கண் வீற்றிருந்தருளினார் என்றுங் கூறினார். (இது அறுசீரடியாசிரிய விருத்தம்.)

மதுமலர் கரமிசை கொண்டுநின் வழிவழியடியவரென்றுதம்
முதுமறை தெரிய மொழிந்ததெதிர்முறை முறை முனிவர் வணங்கின்
ரிதுபர னருளை வழங்குவதெனவரிபிரமரெழுந்து நம்
பதநிலை பெறவருளென்றிருபரிபுரகழல்கள் பணிந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொ-ரை: அப்பொழுது இருடிகள் தேன் பொருந்திய நறுமலர்களைக் கையிற்கொண்டு அடியேங்கள் தேவரீருக்குப் பரம்பரையாக வழித்தாண்டரென்று விண்ணப்பஞ்செய்து அருச்சித்து, தமக்குரிய பழைய வேதங்களை அப்பொருடோன்றப் பாராயணஞ் செய்து துதித்துச் சந்நிதியில் பலமுறை நமஸ்காரஞ் செய்தனர். அது கண்ட விஷ்ணு பிரமா என்னுமிருவரும் சிவபெருமான் நமக்குத் திருவருள் செய்வதற்கு இதுவே உசித சமையமென்று விரைந்தெழுந்து, நம் பதவிகள் நமக்கெஞ்ஞான்றும் நிலைபெறத் தேவரீர் திருவருள் செய்யுமென்று பிரார்த்தித்து வேதங்களாகிய சிலம்புகள் தரித்த உபய திருவடிகளை வணங்கினார்.

அப்பொழுது - அப்பொருள் பதியாகிய சிவபெருமானுக்குப் பசுக்களாகிய தாம் வழித்தொண்டரென்னும் பொருள், ஒரோவழிப்பொருள் யாமே என்று மயங்கும் பரவ விஷ்ணுக்களாகிய நம் போலன்றி, இருடிகள் சிவபெருமானொருவரே பரமபதியென்றும், நாமெல்லாம் அநாதியே பஞ்சபாசங்களினாற் பாதிக்கப்பட்ட பசுக்கள், ஆகலின் அப்பதிக்கு நாம் என்றும் மீளா அடிமைகள் என்றும் வேத ஆகமங்கள் கூறுமுண்மையை ஒருபோதும் மறவாத உத்தம சிவபத்திமான்களாகலின், அவ்விருடிகள் வணங்கியருள் பெறும் போதே அச்சார்பு பற்றி நாமும் வணங்கியருள் பெறும் பெறவே வேண்டுமெனவுட்கொண்டு, இது பரனருளை வழங்குவதென்றாரென்க. அக்கருத்து "வேண்டத்தக்கதறிவோய் நீ வேண்டமுழுதும் தருவோ நீ வேண்டுமயன் மாற்கரியோய் நீ வேண்டியென்னைப் பணிகொண்டாய்", ''திருப்பெருந்துறையுறைவான் வாணோர்களுமறியாததொர் வளமீய்ந்தனனெனக்கே", ''சுடர் பொற்குன்றைத் தோளாமுத்தை வாளாதொழும்புகந்து, கடைப்பட்டேனை யாண்டு கொண்ட கருணாலயனைத், திருமால்பிரமன், தடைபட்டின்னுஞ் சாரமாட்டத் தன்னைத் தந்த வென்னார முதை, பூமேலயனோடு மாலும் புகரிதென், றேமாறி நிற்க வினையே னிறுமாக்க, நாய்மேற்றவிசிட்டு நன்றாப் பொருட்படுத்த, திருமேனியானுக்கே சென்றூதாய் கோத்தும்பி", "அரிக்கும் பிரமற்கு மல்லாத தேவர்கட்குந், தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம் வந்து நமை, யுருக்கும் பணிகொள்ளு மென்பது கேட்டுவக மெல்லாஞ், சிரிக்குந் திறம்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ" என்பனவற்றானுமறிக. பதம் வைகுண்டமும் சத்தியவுலகமுமாம்.

அருள்மிகு நல்லூர்முருகன் ஆலயத்தில் நடைபெற்ற

# இந்துசமயப் பேரவைச் செய்திகள்

## சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை

11-08-2005 வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் பேரவையின் சிவனடியார் திருக்கூட்டத்தினரால் குருபூசை நடந்தது. தெரிந்தெடுத்த சுந்தரமூர்த்தி நாயனாரின் தேவாரங்கள் பஜனை முறையில் பாராயணம் செய்யப்பட்டன. அபிசேக ஆராதனைகளும் இடம்பெற்றன. பேரறிஞர் முருகவே பரமநாதன், சிவ முத்துலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

## நீதி நூற் போட்டி

ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் 10ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு நீதிநூல் போட்டி 14-08-2005 ஞாயிற்றுக் கிழமை நடத்தப்பட்டது. 124 சிறார்கள் மிகவும் ஆர்வத்துடன் பங்கு கொண்டனர். போட்டியில் பங்குபற்றிய பிள்ளைகளின் பெற்றோர்களின் ஆர்வம் போற்றத்தக்கது.

## 10ஆவது ஆண்டு நினைவு விழா

ஞானசுரபி ஆத்மஜோதி முத்தையா அவர்களின் 10வது ஆண்டு நினைவு விழா பேரவையின் காப்பாளர் சைவதுரந்தரர் வி. கந்தவனம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மேற்படி விழாவில் ஆத்மஜோதி முத்தையா அவர்கள் எழுதிய ‘முப்பெரும் சித்தர்கள்’ என்ற நூலின் மறு பதிப்பு வெளியிடப்பட்டது. 1973ஆம் ஆண்டு நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்தினரால் வெளியிடப்பட்ட இந்நூல் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது என்பது குறிப்பிடத் தக்கது. நூலை பேரறிஞர் முருகவே பரமநாதன் வெளியிட்டு வைத்தார். பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் நூலைப் பற்றி ஆய்வுரை செய்தார். நூலின் முதற் பிரதியை வழமைபோல சைவப் பெரியார் செல்லத்தம்பி மார்க்கண்டு பெற்றுக்கொண்டார். சிறப்புப் பிரதிகளை இந்துசமயப் பேரவை உறுப்பினர்களும், திருக்கூட்டத்தை சேர்ந்தவர்களுமாகிய கனகசபை கந்தையா, கணபதிப்பிள்ளை வித்தியானந்தன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். நீதிநூற் போட்டியில் பங்கு பற்றிய சிறார்களுக்கு கலாநிதி இ.





பாலசுந்தரம், பேரறிஞர் பரமநாதன் உலகசைவப்பேரவை (கனடாக்கிளை) செயலாளர் திரு. தி. சிவயோகபதி ஆகியோர் பரிசில்களை வழங்கினர்.

## மொன்றியலில் முத்தமிழாரம் 2005

ஆத்மஜோதி தமிழர் இணையம் 03-09-2005 சனிக் கிழமை வழங்கிய 11ஆவது வருட முத்தமிழாரம் விழாவில் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் பத்தாவது ஆண்டு நினைவு விழாவும் நடத்தப்பட்டது. பெரியாரின் ஞாபகார்த்தமாக ஆத்மஜோதி தமிழர் இணையத்தில் கல்வி கற்கும் 200க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு இந்து சமயப்பேரவை பரிசில்களை வழங்கியது. பரிசில்களை பேரவையின் காப்பாளர் சைவதுரந்தரர் கவிஞர் வி. கந்தவனமும், இந்து சமயப் பேரவையின் உறுப்பினரும் தொண்டருமாகிய பெரியார் செல்லத்தம்பி மார்க்கண்டு அவர்களும் வழங்கினார்கள். முத்தையா சுவாமிகளின் நினைவு அரங்கம் இணையத்தின் ஆசிரியர் உதயகுமாரின் தலைமையில் நடைபெற்றது. கவிஞர் வி. கந்தவனம், சிவ. முத்துலிங்கம், திரு. வெங்கடேச சர்மா, இணையத்தின் செயலாளர் சசிகுமார் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இணையத்தின் மாணவர்களின் இயல், இசை, நாடக நிகழ்ச்சிகள் யாவும் மிகவும் சிறப்பாக அமைந்தமை குறிப்பிடத் தக்கது. இணையத்தின் ஆசிரியர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் யாவரும் பாராட்டுக்குரியவர்கள். இந்து சமயப்பேரவையின் சகோதர அமைப்பாகிய ஆத்மஜோதி தமிழ் இணையத்தின் வளர்ச்சி கண்டு பேரவை பெருமையடைகின்றது.

## திருமுறை முற்றோதல் பூர்த்தி விழா

6ஆவது வருடமாக ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் பன்னிரு திருமறை பூர்த்திவிழா 25-09-2005 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. 28-08-2005 நடைபெற்ற திருமுறை மனனப்போட்டியில் பங்குபற்றிய சிறார்களுக்கு இவ் விழாவில் பரிசில் வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10ஆவது ஆண்டு நினைவுப் பேச்சுப் போட்டி

27-08-2005 சனிக்கிழமை மேற்படி பேச்சுப்போட்டி நடத்தப் பட்டது. பேச்சுப்போட்டியில் 26 பிள்ளைகள் கலந்து கொண் டனர். பேச்சுப்போட்டியில் பங்குபற்றிய சில மாணவர்கள் வருங்காலத்தில் சிறந்த பேச்சாளராக பரிணமிப்பார்கள் எனப் பேரவையின் காப்பாளர் கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் விதந்துரைத்தார்.

## 10ஆவது ஆண்டு நினைவுத் திருமுறை மனனப் போட்டி

28-08-2005 ஞாயிற்றுக்கிழமை திருமுறை மனனப்போட்டி நடத்தப்பட்டது.

152 பிள்ளைகள் பங்கு பற்றினார்கள். 14 வயதுக்கு உட்பட்ட சிறார்கள் மிகவும் ஆர்வத்துடன் பங்குபற்றியமை பாராட்டுக்குரியது

## ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் 10ஆவது ஆண்டு நினைவுக் குருபூசை

16-09-2005 வெள்ளிக்கிழமை மாலை 3 மணி தொடக்கம் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் குருபூசை நடைபெற்றது. பேச்சுப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. பேரவையின் பொருளாளர் செ. சோமசுந்தரம் விழாவிற்கு தலைமைவகித்தார். பேறிஞர் முருகவே ரமநாதன், சைவதுரந்தரர் கந்தவனம், திருமதி சண்முகலிங்கம் இராசலட்சுமி, ஞானசம்பந்தர் அன்னபூரணம், தர்மதேவி சிறிசுப்பிரமணியம், கணேஸ் நாகேஸ்வரி ஆகியோர் நினைவுப் பேருரை நிகழ்த்தினர். பேரவையின் உதவிச்செயலாளர் சிவமுத்துலிங்கம் தாபகர் ஆத்மஜோதி நா. முத்தையா 1995ம் ஆண்டு நடத்திய அந்தர் யோக நிகழ்வின் ஒளியிளை நாடாவை வெளியிட்டு உரை நிகழ்த்தினார். ஒளியிழை நாடாவின் முதற்பிரதியை பெரியார் செல்லத்தம்பி மார்க்கண்டு அவர்கள் பெற்றுக் கொண்டார். அவரைத் தொடர்ந்து பேரவையின் சிவனடியார் திருக்கூட்டத் தினரும் பெற்றுக் கொண்டனர். அபிசேக ஆராதனைகளும் அர்ச்சனை மாலை, திருமுறை பஜனை களும் இடம்பெற்றன.





## திருவருட்செல்வர் விழா

09-09-2005 வெள்ளிக் கிழமை மிசிசாகா யாழ். கூட்டுறவு இல்லத்தில் மேற்படி விழா சைவசித்தாந்த மன்றத் தலைவர் திரு. தி. விசுவலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மன்ற மாணவர் களின் நிகழ்ச்சிகள் பல இடம் பெற்றன. பிரதம விருந்தினர் களாக அமெரிக்க ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பீடத்தின் பீடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சைதன்யானந்த தம்பதிகள் கலந்து சிறப்பித் தனர். சிறப்பு விருந்தினராக பிரித்தானிய சைவமுன்னேற்ற சங்கத்தின் செயலாளர் திரு வ. இ. இராமநாதன் கலந்து சிறப்பித்தார்.



ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் 10ஆவது ஆண்டு நினைவுக் குருபூசையில் பிரதம விருந்தினர் நா. சிவலிங்கம் உரைநிகழ்த்துகிறார்.



திருமுறை முற்றோல் பூர்த்திவிழாவில் ஆலயக் குருக்கள் ஆசியுரை வழங்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரை ஸ்ரீ திருப்புகழ் சுவாமிகள்

## திருமுருக கிருபானந்தவாரியார்

மதுரை ஸ்ரீ திருப்புகழ்சாமி ஐயர் என்ற மாமுனிவர் சிறந்த முருகனடியார். இவர் இராமநாதபுரத்திலே சிறந்த அந்தணர் குலத்திலே அவதரித்தவர். இராமநாதபுரம் சமஸ்தானத்துடன் தொடர்பு கொண்டவர்.

ஸ்ரீ திருப்புகழ்சாமி ஐயர் இராமநாதபுரம் சங்கீத சக்கரவர்த்தி பூச்சி ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்கள் பால் இசை பயின்றவர்கள். மாண்புமிக்க முத்துராமலிங்க சேதுபதி மன்னரிடம் அலுவல் செய்து வந்தார்.

இளமையிலிருந்தே முருகனிடம் ஆராக் காதலும், திருப்புகழில் அளவற்ற பற்றும் பூண்டவர். திருப்புகழ் என்ற திருமறையை யாண்டும் பரப்ப வேண்டும் என்ற கருத்துடையவராய் மதுரையைத் தனக்கு உறைவிடமாகக் கொண்டு ஐம்பது ஆண்டுகட்கு முன்னர் மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் தெற்கு வீதியில் திருப்புகழ்ச் சபையை 1919ம் ஆண்டில் சித்தார்த்தி வருடம் ஆடி மாதம் 18ம் தேதியன்று நிறுவினாாகள். நூற்றுக்கணக்கான மாணவர்கட்கு சிறந்த பண்முறைப்படி திருப்புகழைப் பாட பயிற்சியளித்தார்கள். திருச்செந்தூர் திருமலை, திருநெல்வேலி, ஐதராபாத் முதலிய பல ஊர்களில் திருப்புகழ் கோஷ்டியும், விரிவுரையும் செய்து மக்களிடம் திருப்புகழ் பற்றை வேரூன்றச் செய்தார்.

சதா திருப்புகழைப் பாடுவதும், திருப்புகழுக்கு உரை கூறுவதும் முருகவழிபாடு செய்வதுமாகவே தன் காலத்தைக் கழித்தார்.

ஒருநாள் இவருடைய கனவில் விடியற்காலையில் திருவண்ணாமலைக் கோபுரமும், அருணகிரியாருக்கு முருகன் குருவாக வந்து உபதேசித்த காட்சியும் தோன்றின. அந்தக் காட்சியை ஓவியமாக்கினார். அதற்குப்பின்னர் திருவண்ணாமலை சென்று தரிசித்தார். தனது குருநாதருடைய அவதார தலமாகிய திருவண்ணாமலைக்கு ஆண்டுதோறும் சென்று திருப்புகழ் கோஷ்டி பஜனை செய்வார்.

மூன்றாம் பிரகாரத்தில் கல்யாண மண்டபத்துக்கு அருகில் உள்ள அருணகிரியார் சமாதி மண்டபத்தை வழிபடுவார்.





### தந்தையாருடைய சந்திப்பு

அடியேனுடைய தந்தையார் மல்லையதாஸ் பாகவதர். காங்கேய நல்லூரில் திருப்புகழ் சபை நிறுவி எங்களுக்கெல்லாம் திருப்புகழைக் கற்றுத் தந்தார். சிறந்த முருகனடியார். உயர்ந்த ஒழுக்கமுடையவர். முருகனையே குருநாதராகக் கொண்டு சகல கலைகளிலும் வல்லவராய் விரிவுரை புரியும் வித்தகராய் விளங்கினார். மகாபாரதம், இராமாயணம், கந்தபுராணம் முதலிய புராணப் பிரசங்கம் செய்தும், பலருக்கு சிவதீட்சை செய்தும், கொல்லா விரதத்தை வற்புறுத்திக் கூறியும் பக்திப் பயிரை வளர்த்து வந்தார். சீலம் பலரிடம் இன்மையால் இவர் யாரையும் குருவாக ஏற்கவில்லை.

ஒரு சமயம் கார்த்திகைத் தீபப் பெருவிழாவிற்கு திருவண்ணாமலை சென்றார். அங்கு திருப்புகழ் பஜனை புரிந்து திருப்புகழ் விரிவுரை செய்துகொண்டிருந்த ஸ்ரீ திருப்புகழ்சாமி ஐயர் அவர்களை என் தந்தையார் தரிசித்தார். இவரிடம் சிறந்த அன்பு பூண்டார்.

காங்கேயநல்லூருக்குவந்து எமது பிதா அவர்கள் அருணகிரிநாதரின் அவதாரம் போன்ற ஒரு மகான் திருவண்ணாமலையில் வந்தார். "அவருடைய பெருமை அளவிடற்கரியது" என்று எங்களிடம் புகழ்ந்து கூறினார். யாரையும் பாராட்டாத தந்தையார் மிகவும் பாராட்டியபடியால் அவரைத் தரிசிக்க வேண்டும் என்ற அவா அடியேனுக்குண்டாகியது.

### முதல் சந்திப்பு

அடுத்த ஆண்டு கார்த்திகைதீபத் திருவிழாவிற்கு எங்கள் தந்தையார் அடியேனையும் எங்கள் திருப்புகழ்சபை மாணவர்களையும் அழைத்துக்கொண்டு திருவண்ணாமலை சென்றார்.

அடியேன் முதன்முதலாக ஸ்ரீ திருப்புகழ் சுவாமிகளைத் தரிசிக்கும்போது, அவர் அக்கினி மூலையில் திருப்புகழ் கோஷ்டியில் "கனகந்திரள்" திருப்புகழைப் பாடிக்கொண்டிருந்தார். அதற்கு விரிவுரை செய்தார். இத்திருப்புகழின் இறுதி அடியாகிய

"மதியுங் கதிருந்தடவும்படி
உயர்கின்ற வனங்கள்பொருந்திய
வளமொன்று பரங்கிரி வந்தருள் பெருமாளே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பகுதியைப் பாடி, மதியும் கதிரும் என்பது யோக நெறியில் சந்திர நாடி சூரியநாடியைக் குறிப்பிடும் திருப்பரங்குன்றம் மூலாதாரத்தலம், என்று கூறி தத்துவார்த்த விளக்கம் செய்தார். 45 ஆண்டுகளுக்கு முன்கேட்ட அந்த அமுத ஒலி இன்னும் சிறியேனுடைய செவியில் ரீங்காரம் செய்து கொண்டிருக்கிறது. சுவாமிகள் திருப்புகழ் பாடி வியாக்கியானம் செய்யும்போது கண்ணீர் தாரை தாரையாகப் பெருகியோடும். தன்னை மறந்து பாடிப் பரவசமடைவார்.

## காங்கேயநல்லூர் வருகை

அடுத்த ஆண்டில் எங்கள் தந்தையார் திருப்புகழ் சுவாமிகளிடம் சடாட்கர மந்திர உபதேசம் பெற்றுக்கொண்டார். சதா குருநாதரையே நினைந்து நினைந்து உள்ளம் உருகுவார். குருநாதரிடமிருந்து கடிதம் வந்தால் அதனைப் பாதி படித்ததும் விம்மி விம்மியழுவார். படிக்க முடியாது அடியேனிடம் கொடுத்து படிக்கச் சொல்லிக் கேட்பார். சமானமில்லாத குருபக்தியுடையவராய் எமது தந்தையார் விளங்கினார்.

ஒருசமயம் கார்த்திகை விழாவிற்குத் திருவண்ணாமலை வந்திருந்த சுவாமிகளை எங்கள் ஊர் காங்கேய நல்லூருக்குத் தந்தையார் அழைத்து வந்தார். அவருக்கு ராஜோபசாரம் செய்தார். மூன்று நாள் முருகன் கோயிலில் அருணகிரியார் சரித்திரத்தை திருப்புகழ் சுவாமிகள் விரிவுரை செய்தார். அந்த விரிவுரை தேன்மழை பொழிந்தது போல் இருந்தது. அருணகிரியார் கோபுரத்திலிருந்து விழுந்தார் என்று கூறும் போது சுவாமிகள் கண்களில் நீர் ஆறாய்ப் பெருகியது. சபையில் இருந்த அத்தனை பேரும் உருகியழுதார்கள். சுவாமிகள் எமது பிதாவிடம் அளவில்லாத அன்பும் அருளும் உடையவராய் விளங்கினார். எளியேன் மீதும் மிகுந்த கருணையுடையவராய்த் திகழ்ந்தார்.

## ஓர் அற்புதம்

காங்கேயநல்லூர் வேலூருக்கு 3 கல் தொலைவில் உள்ள முருகன் திருத்தலம். காங்கேயநல்லூருக்கு 20 கல் தொலைவில் உள்ள ஊர் திமிரி.

திமிரியில் வாழுகின்ற சிறந்த செம்மல் எமது தமக்கையார்





காமாட்சியம்மையாரின் கணவர் தருமலிங்க முதலியார். அவர் சுவாமிகளைத் தங்கள் திமிரி என்ற ஊருக்கு அழைத்துக் கொண்டு சென்றார். அப்போது தந்தையாருடன் அடியேனும் சென்றிருந்தேன். திமிரியில் சுவாமிகள் விரிவுரை புரிந்தார். மறுநாள் காலை சுவாமிகட்கு என் தமக்கையாரும், அத்தானும் பாத பூஜை செய்தார்கள். ஒரு தட்டில் பழங்கள் வெற்றிலை பாக்கு தேங்காய் ஐம்பது ரூபாய் வைத்து சுவாமிகளிடம் கொடுத்தார்கள்.

சுவாமிகள் "எனக்கு ஏன் பணம்" என்று சிறிது சீற்றத்துடன் பின்னே நிற்கின்ற என் தந்தையாரைப் பார்த்தார். தந்தையார் முத்து முத்தாக நீர் சிந்திய கண்களுடன் நின்றார். தந்தையார் அழுவதைக் கண்ட சுவாமிகள் சினம்மாறி தழுதழுத்த குரலில் "ஏன் அழுகின்றீர்" என்று வினாவினார்". தந்தையார், "சுவாமி! இவருக்கு என் செல்வப் புதல்வியை, குழந்தையில்லாத காரணத்தால் மூன்றாந்தாரமாகக்கொடுத்தேன். திருமணமாகிப் பதினேழு ஆண்டுகள் சென்றன. காசி முதல் இராமேசுவரம் ஈறாக எல்லாத் திருத்தலங்களிலும் சென்று இறைவனை வழிபட்டார்கள். மாதந்தோறும் ஒரு செவ்வாய்க்கிழமை திருவண்ணாமலை சென்று மலைவலம் வந்து வழிபடுகின்றார்கள். மகப்பேறு கிடைக்கவில்லை. இதுதான் எனக்குப் பெருங் கவலை" என்று அழுது கொண்டே கூறினார்.

சுவாமிகள் ஆவேசம்போல் 'சரி' என்று கூறி தட்டில் இருந்த இரு வாழைப்பழங்களை எடுத்து என் தமக்கையாரிடம் தந்து, "அம்மா! இந்தப் பழங்களில் ஒன்றை நீ உண்பாயாக, மற்றொன்றை உன் கணவனாரிடம் தந்து உண்ணச் செய்வாயாக. இந்த மாதம் மாதவிலக்கம் ஏற்படும். அடுத்த மாதம் மாதவிலக்கம் ஏற்படாது. உன் மணிவயிறு வாய்க்கும். ஆண்குழந்தை பிறக்கும். அடுத்த கார்த்திகை தீபத்திற்கு நான் திருவண்ணாமலை வரும்போது நீ குழந்தையுடன் அங்கு வருக. வருந்தற்க" என்று கூறியருளினார். இவற்றை அடியேனும் அருகில் நின்று கேட்டுக்கொண்டிருந்தேன். பின்னர் சுவாமிகள் புறப்பட்டார்கள். காட்பாடி போய் ரயில் ஏறி திருப்பதிக்குச் சென்றார்கள். அடியேனையும் அழைத்துச் சென்றார்கள். படிவழி மலையேறி ஒரு நாளில் திருவேங்கடநாதரைத் தரிசித்துத் திரும்பினோம். இந்த நிகழ்ச்சி நடந்தது கார்த்திகை மாதம். என் தமக்கையார் கார்த்திகையில் மாதவிலக்கம் பெற்றார். மார்கழி மாதத்தில் மணி வயிறு வாய்க்கப் பெற்றார்கள். அடுத்த புரட்டாசி மாதத்தில் ஆண்மகவைப் பெற்றார்கள். நித்தியானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பெயர் சூட்டினார்கள்.

அடுத்த கார்த்திகைப் பெருவிழாவில் 3 மாதக் குழந்தையுடன் திருவண்ணாமலைக்குச் சென்றார்கள். அங்கு வழக்கம்போல் வந்துள்ள திருப்புகழ் சுவாமிகளை வடக்கு ரத வீதியில் அவர்கள் கட்டியுள்ள மடத்திற்கு அழைத்துப் பாதபூஜை செய்து, குழந்தையை திருவடியில் கிடத்தினார்கள். சுவாமிகள் ஆசீர்வதித்து, "அம்மா! இன்னும் உனக்கு மகப்பேறு உண்டாகும். இவனுக்கு ஒரு தம்பியும் பிறப்பான்" என்று கூறியருளினார். அந்தத் திருவாக்கின்படி எனது தமக்கையாருக்குப் பின்னர் ஆண்மகவும் பெண்மகவும் பிறந்தன.

இத்தகைய உயர்ந்த வாக்கு சித்தியுடையவர் ஸ்ரீ திருப்புகழ் சுவாமிகள். இந்த நிகழ்ச்சி மிகவும் அதிசயமானது.

**இன்னும் ஒரு அதிசயம்**

எங்கள் தந்தையார் சிறியேனை அழைத்துக் கொண்டு மதுரைக்குச் சென்றார். அது பங்குனி மாதம். சுவாமிகள் திருவடியில் வீழ்ந்து எனது பிதா கதறியழுதார்.

சுவாமிகள் "ஏன் அழுகின்றீர்" என்று பரிவுடன் கேட்டார்.

எனது பிதா "குருநாதா" அடியேன் ஏழை, முருகனிடம் உத்தரவு பெற்று, என் பிறப்பிடமாகிய காங்கேய நல்லூரில் முருகன் திருக்கோயிலில் இராஜகோபுரம் கட்ட முயன்றேன். 5 லட்சம் செங்கல் கடன் வாங்கி ஆயத்தமும் செய்தேன். ஐந்து ஆண்டுகள் ஆகியும் அந்தக் கடனும் தீரவில்லை. கோபுரமும் கட்டப்பெற வில்லை. நகரத்தார் இருக்கும் செட்டிநாடுகளில் தங்கள் நண்பர்கட்குக் கடிதம் கொடுங்கள். அடியேன் சென்று கந்தபுராணம், பாரதம், இராமாயணம் பிரசங்கம் செய்து, பொருள் ஈட்டித் திருப்பணி செய்வேன்" என்றார்.

சுவாமிகள் புன்னகை புரிந்தார். நீர்போய் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வரரைத் தரிசனம் செய்துவிட்டு வாரும் என்றார். அதுபடியே தந்தையார் என்னுடன் ஆலவாயண்ணலையும், அங்கயற்கண்ணம்மையையும் போற்றி செய்துவிட்டு குருநாதர்பால் சென்றார்.

சுவாமிகள் தந்தையாரைக் கருணையுடன் பார்த்து, "கோபுரத்துக்குப் பணம் உங்கள் ஊருக்கு அருகிலேயே கிடைக்கும். செட்டிநாட்டுக்குப் போக வேண்டாம்."

ஒரே ஒரு ரூபாயை மூலதனமாக வைத்துத் தொடங்கும், பணம் கிறுகிறு என்று வரும். ஆறு மாதங்களில் ராஜகோபுரத்





திருப்பணி முற்றுப்பெறும், அத்திருப்பணி நடக்கும்போது ஒரு உயிர்ச்சேதம் நிகழும். அப்போது இந்தத் திருநீற்றையிடும், ஆபத்து விலகும்" என்று கூறி ஒரு சிறு விபூதிப் பையை வழங்கினார்.

தந்தையாருக்குச் சுவாமிகளின் வாக்கு என்றால், அது வேதமொழி தான். ஒரு சிறிதும் அதில் சந்தேகம் கிடையாது.

அதற்குமறுநாள் கோயிலில் சுவாமிகள் நீராடிக் கொண்டிருந்தார். வாளியில் ஆடைகள் இருந்தன. "அவற்றைத் தோய்த்துக் கொடு" என்று பிதா என்னைக் கண்களால் ஏவினார். அடியேன் துணியைத் தொடச் சென்றேன்.

சுவாமிகள்: இதனை நீ தோய்க்காதே. அதோ அந்த வாளியில் உள்ள என் ஆடைகளைத் தோய்த்துக் கொடு. இது என் அன்னையின் ஆடை. இதனை நான்தான் தோய்க்க வேணும் என்றார்கள். சுவாமிகள் தாயாருடைய வெள்ளைப் புடவைகளைத் தாமே தோய்த்து உதவும் பண்பாடு உடையவர் என்பது விளங்கிற்று.

-தொடரும்



திருமுறைக் காட்சி நூல் வெளியீட்டில் முதல் பிரதியை வழங்குதல்

திருமுறைக் காட்சி நூல் வெளியீட்டில் சிறப்புப் பிரதியை வழங்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒல்லாந்து யாத்திரை

சைவதுரந்தரர் கவிஞர் வி. கந்தவனம்

உ

முன்னுரை

முதலரிச் சுவடு தாங்க
முதன்முதற் பள்ளி செல்ல
முதன்முறை தொழில்தொ டங்க
முக்கி பயணஞ் செய்யப்
புதுமனை புகுந்து வாழப்
பொதுப்பணி தொடர வெல்லாம்
முதல்நினைந் தழைக்கின் ஆனை
முகன்விரைந் தருளு வானே.

பயணங்கள் பலவகை. எனது வெளிநாட்டுப் பயணங்கள் எல்லாமே கலை இலக்கியம் அல்லது சமயம் சம்பந்தமானவைதாம். சுற்றுலாக்களில் எனக்கு அவ்வளவு நாட்ட மில்லை. இளவயதில் இலங்கையிலும் இந்தியாவிலும் பல சுற்றுலாக்களை மேற்கொண் டிருக்கிறேன். இந்த வயது அறிவையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளும் வயது. என் இனத்தவர்களை வழிப்படுத்த விழையும் வயது. ஆதனால் குடும்பத்துடன் சுற்றுலா என்று புறப்பட்டாலும் அதனை இலக்கிய உலாவாக மாற்றிவிடுவது எனது இயல்பு.

இதுவரை எந்தப் பயணத்தையும் நான் கட்டுரைகளாக்கியது கிடையாது. ஆயினும் உறவினர்களும் நண்பர்களும் சிலவற்றைப் பதிவுசெய்து தந்திருக்கிறார்கள். யேர்மனி நிகழ்வுகள் சிலவற்றை மைத்துனர் திரு. இ. செல்வராசா அவர்கள் ஒளிநாடாக்களில் பதித்திருக்கிறார். நண்பர் கலாநிதி மு.க.சு. சிவகுமாரன் அவர்கள் 'யேர்மனியில் கந்தவனம்' என்ற அரியதொரு நூலையே எழுதியிருக்கின்றார். இங்கிலாந்தில் இவ்வாண்டு யனவரி 29 முதல் பெப்பிரவரி முதலாந் திகதிவரை நான் பங்குபற்றிய நிகழ்ச்சிகளிற் பலவற்றையும் வானொலிப் பேட்டிகளையும் பதிவுசெய்து அடுத்தநாள் நான் புறப்படுவதற்கிடையில் அதி வேகத்தில் அவற்றை ஒழுங்குமுறையிற் பிரதிபண்ணித் தந்தவர் இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. இ. இராமநாதன் அவர்கள். எனினும் அந்த அளவுக்கு 1998ல் குடும்பத்துடன் நான் மேற்கொண்ட





இங்கிலாந்துப் பயண நிகழ்வுகள் பதிவாகவில்லை. அது ஒரு தனிப்பட்ட பயணம் என்றாலும் 'மேகம்' பத்திரிகை ஆசிரியர் டாக்டர் இந்திரகுமார் பத்திரிகை சார்பில் அளித்த வரவேற்பு, பேமிங்காமில் பேராசிரியர் கோ. மகாதேவா அவர்களது வெளியீட்டகமாகிய நூற்றாண்டு வீட்டில் நிகழ்ந்த இலக்கியச் சந்திப்பு, இலண்டன் முருகன் கோயிலில் எனது சொற்பொழிவு போன்ற நிகழ்வுகள் மறக்கமுடியாதவை.

எனினும் அவைபற்றி நானாக எதுவும் எழுதவில்லை. இந்த ஒல்லாந்துப் பயணமே நான் எழுதும் முதற் பிரயாணக் கட்டுரை - தொடர் கட்டுரைகள். எழுதுவதற்குப் பல காரணங்களும் உண்டு. அவற்றுள் மிக மிக முக்கியமானது தென் கெல்டர் ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகர். அவர் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டார். கோயில் தரிசனம் தெய்வ தரிசனமாகிய அனுபவத்தைச் சொல்லிக் காட்டவும் அவர் கருணை வேண்டும். சொல்லு என்று திருவருள் தூண்டுகிறது. அந்த வகையில் இதனை ஒரு பக்தி அனுபவத் தொடராகவே கருதுகின்றேன்.

செல்வ விநாயகரின் தொண்டர்களின் பெருமையும் பேசத் தகுந்தது. 'தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே' என்றார் அவ்வைப் பிராட்டியார். தொண்டர்தம் பெருமைகளைச் சொல்லும் தகைமை எனக்கு இருக்கிறதோ இல்லையோ, அவர்களின் அர்ப்பணிப்பு, தியாகம், சாதனைகள் யாவற்றையும் பதினாறு நாட்கள் அங்கு தங்கி யிருந்து நேராகவே கண்டதில் மனத்திற் பெருமகிழ்வு, மலையளவான பூரிப்பு ஏற்பட்டுள்ளது. அதனை ஓர் எழுத்தாளன் என்ற வகையில் எழுதலாமல்லவா? அடியார்களிற் பெரும்பான்மையானவர் எனக்குப் புதியவர்கள். ஆயினும் அவர்களது அடக்கம், பக்தி, பணிவு, பண்பு எல்லாமே என்னைக் கட்டிப்போட்டுவிட்டன. ஒருசிலர் ஏற்கனவே தெரிந்தவர்களாகவும் என்னிடம் கல்வி பயின்றவர்களாகவும் இருந்தனர். அவர்களின் உபசரிப்பையும் உறவையும் மறக்கமுடியாது.

எல்லாவற்றையும் எழுதவிருக்கிறேன். எழுதும் கட்டுரைகளை நூலாக வெளியிடுந் திட்டமும் உண்டு. பலர் நூலை எழுதி முடித்தபின் முன்னுரையை எழுதுவதுண்டு. நானும் அவ்விதம் எனது நூல்களுக்கும் பிறர் ஆக்கங்கள் சிலவற்றுக்குஞ் செய்திருக்கிறேன். ஆனால் இந்த நூலை முன்னுரையுடனேயே தொடங்குகிறேன். நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகளாக இனிமேற்றான் விரியவிருக்கின்றது.

நூலுக்கு 'ஒல்லாந்து யாத்திரை' என்று பெயர் வைத்தமைக்குக் காரணம் உண்டு. நெதலாந்து என்பதுதான் நாட்டின் உத்தியோகபூர்வமான பெயர். எனினும் ஒல்லாந்து என்பதும் புழக்கத்தில் உள்ளது. இலங்கை ஒல்லாந்தர் ஆட்சியில் முன்பு இருந்ததால் தமிழர்களுக்கும் அதுதான் பழக்கமான பெயர். நெதலாந்து என்ற பெயரை எம்மவர் பலர் அறியாதவர்களாகவே இருக்கிறார்கள்.

'ஒல்லாந்துப் பயணம்' என்ற பெயரை வைத்துத்தான் முன்னுரையைத் தொடங்கினேன். மேலுள்ள பந்தியை எழுதத் தொடங்கியதும் பயணத்துக்குப் பதிலாக யாத்திரை பொருத்தமாக இருக்கும் என்ற எண்ணம் மேலோங்கியது. மணிவாசகப் பெருமானின் திருவாசகத்தில் 'யாத்திரைப் பத்து' என்ற அனுபவ அதீதப் பகுதி ஒன்று வருகிறது. அதில் இறைவன் திருத்தாள்களைச் சென்று சேர வருமாறு அடியார்களை அவர் அழைப்பார். அதில் வரும் ஆறாம் வாசகம் இது:

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்
 புயங்கன் தாளே புந்திவைத்திட்(டு)
இகழ்மின் எல்லா அல்லலையும்
 இனியோர் இடையூறு அடையாமே
திகழுஞ் சீரார் சிவபுரத்துச்
 சென்று சிவன் தாள் வணங்கிநாம்
நிகழும் அடியார் முன்சென்று
 நெஞ்சம் உருகி நிற்போமே.

'புயங்க நடனத்தை ஆடும் சிவபிரானின் திருத்தாள்களையே நெஞ்சிலிருத்திப் போற்றுங்கள், வணங்குங்கள், பூக்களினால் அர்ச்சியுங்கள்! இனிமேல் எவ்வித துன்பமும் வராதவகை சிறப்புற்று விளங்கும் சிவபுரத்துக்குச் சென்று சிவபெருமானின் திருவடிகளை வணங்கி, அங்குள்ள அடியார்கள் முன் சென்று அவர்களைப் போன்று நாமும் உள்ளம் உருகி நிற்போம்! வாருங்கள்!' என்பது இதன் பொருள்.





சிவபுரத்துச் சிவபெருமானை வணங்கி உய்வுற அடியார்களை மணிவாசகப் பொருமான் அழைப்பது போலவே தென் கெல்டர் ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகப் பெருமானை வணங்கி மேலோங்க அங்குள்ள தொண்டர்கள் என்னை அழைத்திருக்கிறார்கள். அழைப்பை ஏற்று நானும் யாத்திரை சென்று வந்திருக்கிறேன். பலருக்குக் காசி யாத்திரை, கதிர்காம யாத்திரைபோல எனக்கு ஒல்லாந்து யாத்திரை.

எனது உலகம் பெரிதும் கற்பனை உலகம். அது கவிதைகள் புனைகையில், கதைகள் எழுதுகையில் நான் இல்லாத நான் வலம்வரும் அதிசயமான, காலநேர எல்லைகள் எதுவும் இல்லாத இன்ப வெளி. கட்டுரைகளையும் கற்பனை உலகத்திலிருந்து எழுதலாம். ஆனால் அறிவுக் கட்டுரைகளை, ஆய்வுக் கட்டுரைகளை அறிவுலகத்தில் இருந்துதான் எழுத வேண்டும். பயணக் கட்டுரைகளும் அப்படித்தான். பயணக் கட்டுரைகளிலும் சிலர் காணாதவற்றைக் கண்டதுபோலவும் பிறர் அனுபவங்களைத் தமது அனுபவங்கள் போலவும் எழுதுவதுண்டு.

இங்கு நான் எதையுமே கற்பனை கலந்து எழுதவில்லை. அதற்குத் தேவையுமில்லை. இது பெரிதும் ஒரு சமய அனுபவக் கட்டுரைத் தொடர். எவற்றைக் கண்டேனோ கேட்டேனோ அனுபவித்தேனோ பேசினேனோ அவற்றை அவ்விதமே எழுத விருக்கின்றேன். அதற்கு எல்லாம் வல்ல விநாயப் பெருமான் அருள்புரிய வேண்டுகிறேன். அவர்தான் நெதலாந்துக்கு என்னை அழைத்தவர். அவரே இதனை எழுதவும் தூண்டுகிறார். அதனால் இந்தப் படையலை அவரது உன்னதமான தொண்டர்கள் வாயிலாக அவரது திருவடிகளுக்கே காணிக்கையாக்கி வணங்குகின்றேன்.

## 1. அழைப்பு

யனவரி 21, 2005ல் 'சிவத்தமிழ்' ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் அவர்களது அழைப்பின்பேரில் ஐரோப்பிய பயணம் ஒன்றை மேற்கொள்ள நேர்ந்தது. அவர் யேர்மனியிலும் இங்கிலாந்திலும் ஒழுங்கு செய்திருந்த கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது முத்துவிழாக்களிலும் பிற நண்பர்கள் அழைத்த நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றிவிட்டு 09.02.2005 அன்று வீட்டுக்குத் திரும்பினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பி இரு வாரங்கள்கூட ஆகவில்லை, யேர்மனியிலிருந்து சமூகஜோதி திரு. புவனேந்திரன் அவர்களிடமிருந்து தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. யூன் மாதப் பிற்பகுதியில் ஒல்லாந்து செல்ல வசதியாக இருக்குமோ என்பது அவர் கேள்வி. எதற்கு என்று கேட்டதற்கு அங்கு தென் ஹெல்டர் நகரத்தில் உள்ள ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகர் ஆலயத் திருவிழாக் காலத்தில் பேசுவதற்கு என்று அவர் சொன்னதும் விநாயகர் அழைக்கிறார் என்ற எண்ணமே மேலிட்டது. சரி என்று சொல்லிவிட்டேன்.

விநாயகர் எனது குலதெய்வம். என்னை வாழவைப்பதும், வழிநடத்துவதும் அவர்தான். எனது விநாயகப் பாக்களைப் படித்தவர்களுக்கு எனக்கும் அவருக்குமுள்ள தொடர்பு நன்கு தெரியும். அவர் அழைத்தால் போகாமல் இருக்க முடியுமா?

புவனேந்திரன் அவர்கள் எனது மனைவிவழி உறவினர். யேர்மனியிலும் தாயகத்திலும் பலவிதமான சமய சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருபவர். யேர்மனியில் சுவெற்றா நகரில் உள்ள கனகதுர்க்கா அம்பாள் ஆலய நிர்வாக சபைத் தலைவராகவும் அங்குள்ள தெய்வீகப் பேரவையின் ஆலோசகராகவும் தொண்டாற்றுகின்றார். யேர்மனியில் இயங்கும் சர்வதேசத் தமிழர் மற்றும் குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் இலங்கை - ஐரோப்பிய நாடுகளின் இணைப்பாளராகவும் இருந்துவருகிறார். அவருக்கு யேர்மனியிலும் பிற ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள கோயில்களுடன் தொடர்புகள் உண்டு. எனக்கு உலகப் பல்கலைக் கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்குவதற்கும் திரு. புவனேந்திரன் அவர்களே காரணராக இருந்தார் என்ற இரகசியத்தையும் இந்த இடத்திலே பகிரங்கப் படுத்த விரும்புகிறேன்.

அவர் மேலும் தென் ஹெல்டர் விநாயகர் ஆலயம்பற்றிக் கூறி, யூன் 18ல் அதன் கொடியேற்றம் என்றும் கொடியேற்றம் முதல் பூங்காவனம்வரை நான் சமயச்சொற்பொழிவு நிகழ்த்த வேண்டும் என்றும் கூறினார். ஆலய நிர்வாக சபையிலுள்ள திரு. கந்தசாமி என்பவர் தெல்லிப்பளையைச் சேர்ந்தவர் என்றும் அவர்தான் தன்னுடன் தொடர்பு கொண்டவர் என்றும் நான் வரக்கூடியதாக இருந்தால் நிர்வாக சபைக்கு அதனைத் தெரிவிப்பார் என்றும் அதன்பின் நிர்வாக சபை கடிதமூலம் முறைப்படி அழைக்கும்





என்றும் கூறிமுடித்தார். அவர் கூறியது போலவே அடுத்த மாதத்தில் நிர்வாக சபையின் அழைப்புக் கடிதம் இப்படி வந்தது:

### சிறப்புச் சொற்பொழிவாளர் அழைப்பிதழ்

கலாநிதி கவிஞர் ஏ. கந்தவனம் அவர்களுக்கு,

இத்தால் ஸ்ரீ வரதராஜ செல்வவிநாயகர் ஆலய பரிபாலன சபையாராகிய நாங்கள், எமது ஆலய வருடாந்த மகோற்சவம் 2005க்குச் சிறப்புச் சொற்பொழிவாளராகத் தங்களை அழைக்கிறோம்.. இவ்வாலய மகோற்சவமானது 18.06.2005 சனிக்கிழமை கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பித்து 26.06.2005 ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தமும் தொடர்ந்து பூங்காவனம், வைரவர் பொங்க லுடன் 29.06.2005 நிறைவுபெறும். தாங்கள் இம் மகோற்சவத்தில் பகல் திருவிழாவிலும் இரவுத் திருவிழாவிலும் ஏறத்தாழ அரை மணித்தியாலங்களுக்குச் சொற்பொழிவாற்றி ஆலயத் திருவிழாவைச் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்களுக்குத் தேவையான தங்குமிட வசதிகள் ஆலய பரிபாலன சபையால் ஒழுங்குபடுத்தித் தரப்படும்.

இங்ஙனம்,
ஆலய பரிபாலன சபை

அழைப்புக் கடிதத்துக்குப் பதிலாக ஒப்புதற் கடிதம் ஒன்றை அனுப்பினேன். கூடவே மனைவியுடன் வருகிறேன் என்ற செய்தியையும் அவர்களுக்குத் தெரிவித்தேன். இக் கடிதம் அவர்களுக்குக் கிடைப்பதற்கு முன்னதாகவே திரு. செ. கந்தசாமி அவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு தாங்கள் அனுப்பிய அழைப்புக் கடிதம் கிடைத்ததோ வெனக் கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டார்.

அழைப்பு அனுப்பப்பட்டதுபற்றி சமூகஜோதி திரு. புவனேந்திரனும் அறிந்துகொண்டு அதுபற்றிக் கடிதம் ஒன்றும் எழுதியிருந்தார்.

இதற்கிடையில், நான் ஒல்லாந்துக்குச் செல்லவிருக்கும் செய்தி அங்கிருந்தே இங்கு வரத் தொடங்கிவிட்டது. பிரபல எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம்(குறமகள்) அதுபற்றி ஒரு நாள் சொன்னார். எப்படித் தெரியும் என்று கேட்டதற்கு ஒல்லாந்தில் இருக்கும் திரு. மனோராகவன் கூறினார் என்றார். மனோராகவன் இராணி எனப்படும் தனது தங்கை திருமதி தில்லைநாயகி குணநாயகத்தின் மகன் என்றும் அவர் திரு வரதராச செல்வ விநாயகர் ஆலயத்தின் நிர்வாக சபையில் உறுப்பினராக இருக்கிறார் என்றும் அறியத் தந்தார்.

சித்திரையில் என்று நினைக்கிறேன், ஒரு நாள் வண. யோகானந்த அடிகள் தொடர்பு கொண்டார். அவர் இலண்டன் மெய்கண்டார் ஆதீன முதல்வர். உலகச் சைவப் பேரவைத் தலைவரும் அவர்தான். பிரான்சில் வருடாவருடம் சேக்கிழார் பெருமானுக்கு விழா எடுப்பவர். விழா வைகாசி மாதம் நடைபெற இருக்கிறதென்ற செய்தியைத் தெரிவித்து விழா மலருக்குக் கட்டுரை ஒன்று வேண்டுமென்றார். அனுப்புகிறேன் என்று கூறி, ஒல்லாந்துக்குச் செல்லவிருப்பதுபற்றியும் சொன்னேன். சேக்கிழார் விழாவிலும் பங்குபற்ற வேண்டும் என்று அழைத்தார். வைகாசி விழாவுக்கு ஆனியில் எப்படி வரமுடியும் என்று ஒரு கிறுக்கா விட்டேன். அவர் குறுக்கால் வெட்டி, விழாவை ஆனிக்கு மாற்றலாம் என்றும் சனி அல்லது ஞாயிறில் வரக்கூடியதாக ஒரு திகதியைச் சொல்லுமாறும் உடனேயே கேட்டுவிட்டார். ‘யூன் 29 வரை கோயிலில் நிற்கவேண்டும். யூலாய் 2 ஒரு சனிக்கிழமை வருகிறது. அது வசதியாக இருக்கும்’ என்றேன். ‘நல்லது. சிவநந்தி அடிகளாரின் இரண்டாவது ஆண்டு நினைவுப் பேருரையாக உங்கள் சொற்பொழிவை நிகழ்த்துங்கள். போன வருடமும் விழாவுக்கு வந்தீர்கள். இந்த வருடமும் நீங்கள் வரத் திருவருள் பாலித்திருக்கிறது’ என்று கூறி அடிகளார் விடைபெற்றார்.

அவர் ‘திருவருள் பாலித்திருக்கிறது’ என்றதும் எனக்கு,

பெருக்கம் நுகர்வினை பேரொளியாய் எங்கும்
அருக்கனென நிற்கும் அருள்

என்னும் திருவருட்பயன் நினைவுக்கு வந்தது. திருவருள்தான் கதிரவனைப்போல எங்கும் வியாபித்து நிற்கிறது. அதுவே வினைப் பெருக்கத்துக்கும் இன்ப துன்பங்களுக்கும் காரணமாகின்றது. இன்ப துன்பங்களை ஆன்மாக்கள் அனுபவித்து ஆணவ மலத்தின்





வலுவைக் குறைப்பதற்கும் திருவருளே துணையாகின்றது.

அடிகளார் சிறுவயதிலிருந்தே ‘அறியாமல் உள்நின்றளிக்கும்’ திருவருளின் மேன்மையை உணர்ந்தவர். வளர வளரத் திருவருளாலேயே அனைத்தும் நடைபெறுகின்றது என்பதைத் தெளிந்தவர். இது அவரது பக்குவ நிலையை எடுத்துக் காட்டுகின்றது. பக்குவமில்லாதவர் திருவருளே தம்மை வழிப்படுத்துகிறது என்பதை உணர்வதில்லை.

வைகாசி மாதத்தில் ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகர் ஆலய 2005ஆம் ஆண்டுக்கான வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனத்தை அனுப்பியிருந்தார்கள். அதில் நடுவில் விநாயகப் பெருமானதும் இடப் பக்கத்தில் முருகப் பெருமானதும் வலப் பக்கத்தில் சக்தியினதும் படங்களோடு கூடிய முதற் பக்கம் தமிழில் இருந்தது. மறு பக்கத்தில் இடச்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் திருவிழா பற்றிய விபரங்கள் தரப்பட்டிருந்தன. முதற் பக்கத்தில் திருவிழாக்களைச் செய்யவுள்ள அடியார்களின்(உபயகாரர்களின்) ஊர்களுந் தரப்பட்டிருந்தன. அதில் ஒல்லாந்து எங்கணும் பரந்து வாழும் சைவப் பெருமக்கள் விநாயகப் பெருமான்மீது கொண்டிருக்கும் பக்தியும் அவர்களது திருவிழாப் பங்களிப்பும் கோயில் வளர்ச்சியில் அவர்களுக்கு இருக்கும் அக்கறையும் தெற்றெனத் தெரிந்தன.

விஞ்ஞாபனத்துடன் ‘கலாநிதி கவிஞர் வி. கந்தவனம் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு’ என்ற தலைப்பில் வெளியிடப்பெற்ற துண்டுப் பிரசுரம் ஒன்றும் இணைக்கப்பட்டிருந்தது. அதன் ஒரு பகுதியாக சமூகஜோதி திரு. த. புவனேந்திரன் அவர்கள்(சுவெற்றா, யேர்மனி) என்னைப்பற்றி எழுதிய கட்டுரை ஒன்றும் இடம்பெற்றிருந்தது.

(தொடரும்)

**ஆத்மஜோதி சுவாமிகளின் அருள்மொழிகள்**

தவமுனிவர்கள், ஞானிகள், மகான்கள் போன்ற அருளாளர்களாலேதான் நீதியும், தர்மமும், ஆத்மீகமும் எமது சமயமும் பாதுகாக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



6ஆவது வருடமாக 2005ஆம் ஆண்டு பன்னிருதிருமுறை முற்றோதிய அடியார்களில் சிலர்



திருமுறை மனனப் போட்டியில் பங்கு பற்றிய சிறார்கள் ஒரு சிலருடன் பிரதமவிருந்தினர் முருகன் புத்தகசாலை அதிபர் திரு. க. மகேசன் அவர்கள்








பேச்சுப் போட்டியில் பரிசில்கள் பெற்ற மாணவர்கள் பரிசுப் பொருட்களுடன்



25-09-2005 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பன்னிருதிருமுறை முற்றோதலில் சேக்கிழாராக உருவகப்படுத்திய சிவனடியார் திருமுறைகளைச் சுமந்து வீதி வலம் வருமப பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# போகாத இடந்தனிலே போக வேண்டாம்

ஞானசுரபி நா. முத்தையா

தகாத இடத்திலே போகக்கூடாது என்பது இதன் பொருள். தீமை நிகழும் இடமெல்லாம் தகாத இடமே. இந்த இடங்களுக்குச் செல்வதால் தாமும் தகாத செயல்களில் ஈடுபட நேரிடும். ஒருவனுடைய சினேகிதனைக் கொண்டு அவனுடைய குணங்களைத் தீர்மானித்துக் கொள்ளலாம் என்று பெரியோர்கள் கூறுவர்.

பழக்க வாசனையை இல்லாமற் செய்வது மிகக் கடினம். ஒரு முறை அது பதிந்துவிட்டால் அதனை அகற்ற முடியாது. ஓரிடத்தில் சில சாதுக்கள் உட்கார்ந்திருந்தனர். அவ்வழியாக ஒரு யுவதி சென்றாள். ஏனையோர் எப்போதும் போல் ஈசுவர தியானத்தில் ஆழ்ந்திருந்தனர். ஒருவன் மட்டும் அவளைக் கடைக்கண்ணால் பார்த்தான். பெண்ணின் அழகில் ஈடுபட்ட இவன், சாதுவாவதற்கு முன் கிருகஸ்தாச்சிரமத்திலிருந்து மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்தவன். இதிலிருந்து பழக்கவாசனையின் தன்மையை உணரலாம்.

இரண்டு சகோதரக்கிளிகள் ஒரு கூட்டில் வளர்ந்து வந்தன. அவற்றை ஒரு வேடன் பிடித்தான். ஒன்றை ஒரு பிராமணனிடத்திலும் மற்றதை ஒரு இறைச்சிக் கடைக்காரனிடமும் விற்றான். சில ஆண்டுகளின் பின்பு இரு கிளிகளும் விடுதலை அடைந்து ஒரு மரத்திலே வந்து சேர்ந்தன. பிராமணனிடத்திலே வளர்ந்த கிளி வாங்கோ! வாங்கோ! சௌக்கியமா? சாப்பிடுங்கள் என்று கூறியது. இறைச்சிக்காரனிடத்திலே வளர்ந்த கிளி வெட்டு, கொத்து, இறாத்தல் இருநூறு ரூபாய் என்று பேசியது. ஒரே சகோதரக் கிளிகள் சகவாசத்தினால் வேறுபட்ட குணங்களைப் பெற்றிருந்தன.

இதேபோன்று மனிதரும் சகவாசத்தினால், சேருமிடத்தினால் குணங்கள் வேறுபடுகிறார்கள். ஒருவர் தனியாகக் கெட்டுப்போகாமல் நாலு பேர் சேர்ந்து கெட்டுப்போகிற ஒரு தொழில் உண்டு. அதுதான் சூதாட்டம். "இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும் திருநீக்கப்பட்டார் தொடர்பு" என்றபடி சூதாட்டத்தால் சீரழிவும் வறுமையுமே வரும். ஆதலால் அந்த இடத்திற்கும் போகக்கூடாது.

இரையில் மறைந்துள்ள தூண்டில் முள்ளை அறியாமல் மீன் அதை விழுங்குமானால், அதன் உயிருக்கே அபாயம் வந்து விடுகிறது. அதேபோல் சூதாட்டத்தில் கிடைக்கும் அற்ப வெற்றியில் அபாயம் நிறைந்திருக்கிறது. ஒரு முறை வெற்றி கொண்டு நூறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை தோல்வியடையும் சூதாட்டத்தினால் யாருக்கு என்ன பயன் உண்டு?

“ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கு முண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோ ராறு”

சூதாடி நூறு நல்ல குணங்களையும் இழந்து விடுகிறான். சூதாடி என்ற பெயர் ஒன்றே மிஞ்சி நிற்கிறது. சூதாட்டம் ஓயவிடாது. சொல்லப்போனால் பணவருவாய்க்கு வழியில்லாமல் உள்ளதெல்லாம் தொலைந்து போய் அதன் பிறகே ஓயும்.

அப்படிப் பணத்திற்கு வழியே இல்லாமல் சூதாட்டம் ஆடமுடியாமல் ஓய்ந்துவிட்ட பிறகும்கூட சும்மா இருக்கவிடாது. சூதாடப்பணம் அற்றுப் போனதினால் வீட்டில் உள்ள தட்டுமுட்டுகளையும், மனைவி மக்களுடைய உடைமைகளையும் விற்கச்செய்வதும், அப்டியும் பணம் இல்லை என்றால், பொய்சொல்லி வாங்கவும், திருடவும் கூடச் செய்துவிடும். அதனால் பணமில்லாமல், சூதாட்டம் ஓய்ந்த பிறகும்கூட மறுபடியும் அந்த ஆசை தள்ளப் பல குற்றங்களைச் செய்யச் செய்து வாழ்க்கையைச் சீரழித்து விடும். சூதைவிடத் தரித்திரத்தைத் தருவது வேறொன்றுமில்லை.

ஒருவன் சினேகிதருடன் சூதாடிக் கொண்டிருந்தான். தாயார் இறந்துவிட்டதாகச் செய்தி வந்தது. சூதாட்டத்தின் சுவாரசியம் அவனை எழும்பவிடவில்லை. சுடலைக்குப் பிரேதம் இந்த வழியாகத்தானே வரும். அப்போ நான் கலந்து கொள்கிறேன் என்று கூறினானாம். சூதாட்டக்காரரின் சகவாசத்தையும், சூதாட்டப் பழக்கத்தையும் விடாது பற்றுகிறவர்கள் கெட்டே போவார்கள். சூதாட்டம் என்ற மூதேவிக்குள் சிக்கிக் கொண்டவர்கள் வயிராற உண்ணமாட்டார்கள். எந்நேரமும் துன்பத்தால் கவலை உள்ளவர்களாகவே இருப்பார்கள். சூதாட்டக்காரருக்கு உணவின் மேல் நினைவிருக்காது. உண்ண உட்கார்ந்தாலும் சூதாட்ட நினைப்பால் அவசரப்பட்டு அரைகுறையாக உண்பதால் வயிறு நிரம்பாது. சூதாட்டத் தோல்விகளை நினைத்துப் பந்தயம் எடுக்கப் பணம் வேண்டும் என்பதனை நினைத்தும் எந்த நேரமும் துன்பப்பட்டுக் கொண்டே இருப்பார்கள்.

இளம் பிராயத்தில் சூதாட ஆரம்பித்துவிட்டால் அது பல தலைமுறையாக உள்ள குடும்பச் சொத்துக்களையும் நல்ல குணங்களையும் அழித்துவிடும். இளம் பிராயத்தில் சூதாட்டத்தில் இறங்கிவிட்டவன் இளமையின் வேகத்துடன் பெரும் பந்தயங்கள்





வைத்து விரைவில் குடும்பச் சொத்துக்களை அழித்துவிடுவான். குடும்பத்தின் பெருந்தன்மைகளையும் இழந்துவிடுவான்.

சூதாட்டத்தில் இறங்கிவிட்டவனுக்கு நல்ல உடையில் ஆசை இருக்காது. செல்வத்தைப் பாதுகாக்கும் எண்ணமிருக்காது. வயிறார உண்ண நிம்மதி இருக்காது. பெருமை குறையுமே என்ற நாணமிருக்காது. கற்ற கல்விகளின் நினைவிருக்காது. ஆதலால் அவன் வீட்டில் உடை இருந்தாலும், செல்வமிருந்தாலும், உணவிருந்தாலும், குடும்பப் பெருமை இருந்தாலும், அவன் கல்வி கற்றவனாக இருந்தாலும், இந்த ஐந்தும் அவனுக்குப் பயன்படாததால் அவனுடன் பொருந்தியிருப்பன அல்லாதன ஆகிவிடும். தோற்கத் தோற்க சூதாடுகிறவனுக்குச் சூதின் மேல் ஆசை அதிகரிக்கும். அதைப்போல உடல் நோய் அதிகரிக்க அதிகரிக்க உயிருக்கு உடலின் மீதுள்ள ஆசையும் அதிகமாகும். சூதாடுமிடத்திற்குப் போவதால் நாளிலும் பொழுதிலும் அந்த நினைவே உருவாகி அவனைச் சோம்பலாண்டியாக்கி எல்லாவற்றையும் கெடுத்துவிடும்.

வரைவின் மகளிர் என்பது வரை குறைஇல்லாமல் பணம் கொடுப்பவர் யாரேயானாலும் அவர்களுடைய காமத்துக்குத் தமது பெண்மையை விலைக்கு விற்கும் மகளிரைக் குறிக்கும். அவர்களுடைய இன்பத்தை நாடக்கூடாது. போகக்கூடாத இடங்களுள் இதுவும் முக்கியமானதாகும். ஒருமுறை ருசிகண்டவனால் பின்பு போகாமலிருக்க முடியாது.

அன்பு காரணமாக ஆசை கொள்ளாமல் பணம் காரணமாகப் பாசாங்கு ஆசை காட்டும் விலைமாதர்களுடைய பேச்சு இனிமையாக இருந்தாலும் அதனைால் பின்னால் துன்பமே வரும். பெறக்கூடிய பணத்தின் அளவுக்குத் தகக்கபடி அன்புரை பேசுகின்ற உண்மை இல்லாத விலைமகளிரை அவர்களுடைய நுண்ணிய திறமைகளை அப்படியே நம்பிவிடாமல் விலக வேண்டும். உயிரற்ற ஒரு பிணத்தை ஒருவன் எப்படித் தழுவிப் புரட்டினாலும் என்ன செய்தாலும் அது அத்தனைக்கும் சும்மா கிடக்கும்.

(அடுத்த இதழில் தொடரும்)

**ஆத்மஜோதி சுவாமிகளின் அருள்மொழிகள்**

எமது ஞான போதனையாளர்களின் ஆத்மீகச் செல்வங்கள் எத்தனையோ ஆவணப்படுத்தப் படாததால் மறைந்துவிட்டன. எஞ்சியிருப்பவற்றை ஆகுதல் பாதுகாப்பது எங்கள் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

திருமுறைச் செல்வர் திரு. சிவ. முத்துலிங்கம்

1. திருமுறை பாடிய அடியார்கள் பரம்பொருளின் பாதமலரை தலைமேற்சூடிப் பரவிப் பணிந்தனர். அவர்களின் உள்ளத்தில் அன்புநீர் ஊற்றெடுத்துப் பொங்கித் ததும்பியது. அவர்களின் உள்ளத்தாமரையில் மலர்ந்த உணர்வுகளை பாமாலையாக புனைந்து ஆண்டவனுக்கு சமர்ப்பித்தனர். அவை திருமுறையெனப் பெயர்பெற்றது.
2. தாம் அனுபவித்து பெற்ற ஆனந்தத்தை அப்பெருநிதி கிடைத்த வழிகளை திருமுறைப்பாடல்களில் படம்பிடித்து காட்டியுள்ளனர்.
3. ஈசனின் திருவருளை உணர்ந்து தெய்வீக வாழ்வு பெற வழிகாட்டும் திருமுறைகளை கருத்துணர்ந்து ஓதுவோர் கடவுட் காட்சியை கண்டின்புறுவர் என்பதில் சந்தேகமில்லை.
4. ஈழத்தில் சாதுக்கள், சித்தர்கள் பரம்பரை ஒன்று இருந்துவந்துள்ளது. அவர்களில் பலருடைய வாழ்க்கை வரலாறு கேள்வி ஞானத்தோடு நின்றுவிட்டது.
5. வரலாற்று நிகழ்வுகள் ஆவணப்படுத்தப்பட வேண்டியது அவசியம் ஆகும்.
6. இலட்சக்கணக்கான சீடர்கள் வேண்டுவதில்லை. அகந்தையின்றி செயல்படக்கூடிய ஆன்மீக நாட்டமுள்ள நூறு முழுமனிதர்கள் கிடைத்தால் போதும். ஆன்மீக உலகில் பல மாற்றங்களைச் செய்யலாம்.
7. நல்ல கருமத்தை ஆரம்பித்தால் பொருள் எங்கிருந்தேனும் வந்து சேரும் என்பது பெரியவர்கள் கூறுவார்கள்.
8. அரவிந்தர் ஆச்சிரமத்தின் அன்னை அவர்களின் புன்னகை தவழும் முகமும் அருள்பொழியும், கண்களும் தரிசிப்போருக்கெல்லாம் ஆனந்தத்தை கொடுப்பனவாகும். தனது உடைமை எல்லாவற்றையும் அதாவது சொத்துக்கள் எல்லாவற்றையும் தெய்வீகப் பணிக்குத் தியாகம் செய்த பெருமை அன்னையையே சாரும்.
9. பெரியோரிடமும், அரசனிடமும், குருவிடமும், குழந்தையிடமும் செல்லும்போது வெறுங்கையுடன் செல்லக்கூடாது என்பார்கள்.
10. மனிதனுக்கு வாழ்க்கையில் பலவிதமான பிரச்சினைகள் ஏற்படுவதுண்டு. பிரச்சினைகளுக்கு முடிவு காணாமல் திண்டாடும்போது மனிதன் கடவுளை நினைக்கின்றான்.





11. இயற்கையின் சக்தியாக இருந்து எல்லா உயிரினங்களையும் இயக்கி அதனுள் பரவியுள்ள பரம்பொருளை உணருவதே ஒவ்வொரு மனிதனின் பிறப்பின் பயனாகும்.
12. காலத்திற்கு காலம் கடவுள் மகான்களை இப்பூவுலகிற்கு அனுப்பி அவர்கள் மூலம் அருளையும், நன்மைகளையும் வழங்குகின்றார்.
13. கல்வி கேள்வியினாலும், பொன் பொருள்பலத்தினாலும் இறைவனை அடைய முடியாது.
14. ஆன்மீக அறிவு என்ற படிக்கட்டின் மூலம் முத்தியாகிய மேல்நிலையை அடையலாம்.
15. புலனுணர்வைத் தேய்த்து கடவுள் உணர்வைத் தூண்டும் ஆற்றல் மகான்களின் சந்நிதியில் உள்ளது.
16. சமயச் சடங்குகள், மற்றும் சமயச் சாதனைகள் யாவும், கடவுள் உணர்வை மனித உள்ளத்தில் தட்டியெழுப்ப ஏற்பட்டவையாகும்.
17. எவன் ஒருவன் தனது ஆத்ம திருப்திக்காக எழுதுகின்றானோ, அந்த எழுத்துத்தான் மற்றையோருடைய ஆத்மாவையும் திருப்திப்படுத்தும்.
18. உலகம் எங்கும் உள்ள தமிழர்கள் நாவலர்பெருமானை அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். உலகப் பெரியார் வரிசையில் நாவலர் பெருமானை அறிமுகம் செய்து வைக்க வேண்டிய பெரும் பொறுப்பு எமக்கு உண்டு.
19. நாங்கள் சமயத்தின் பெருமைகளை பேசிக்கொண்டிருக் கின்றோமேயொழிய மக்களை சமயவாழ்வு வாழுமாறு தூண்டத் தவறிவிட்டோம்.
20. வாழ்க்கையே சமயம், சமயமே வாழ்க்கை என்பதை என்றைக்கு மக்கள் உணருகிறார்களோ, அன்றைக்குத்தான் மனித சமுதாயத்தில் மனித பண்பாட்டைக் காணமுடியும்.
21. வினை நீங்குவதற்கும் அகங்காரம் தேய்வதற்கும் உரிய ஒரே ஒரு வழி இறைவனுக்கும் அவனது அடியார்களுக்கும் தொண்டு செய்தலாகும்.
22. நான் பணி செய்தேன் என்று சொல்லாமல் இறைவன் அடியேனை தன் பணி செய்யக் கருவியாக்கினார் என்று சொல்வதே பொருத்தமானது.
23. திருமுறைகளை பாடத்தொடங்கும்பொழுது முடிக்கும்பொழுதும் திருச்சிற்றம்பலம் சொல்லுவது மரபு. திருச்சிற்றம்பலம் என்பது இறைவனது திருவடியையே குறிக்கும்.
24. திருவடியை இடைவிடாது தியானிப்பவர்கள் அடியார்கள். சிவனடியை இடைவிடாது சிந்திப்பவர்கள் சிவனடியார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org